விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் : போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருஎ] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ தை மீ கூஉ (1942 ஜனவரி 22 வியாழக்கிழமை) [இலக்கம் எஎ]

விசேஷ
விளம்பரத்திற்கு!

தடுத்தது மானமொன்றே

[கல்வியங்காடு சைவவித்தியாசாலை ஆசிரியர் பண்டிதர் மு. நவரத்தினம் அவர்கள் எழுதியது]

ஆறுமுகவள்ளல் சூரபன்மனை விரைவிலே தமது திருவடியிற் சேர்த்தருளுவதற்காகத் தம்மை அவனுக்குப் பகைவனாக்கி அருளினர். தமது திருவுருக்காத்த சிறு பாலனாகின்ற அவனோடு திருவிளையாடல் புரிவதுபோற் கடுஞ்சமர் புரிந்தார். முருகனுடைய சிறியதோற்றத்தைக்கண்டு தனது தவத்தின் பெருமையினை உணர்ந்த சூரபன்மன் எள்ளி நகையாடினன். "உருவுகண் டெள்ளாமை வேண்டுமுருள் பெருந்தேர்க்—கச்சாணி யன்னா ருடைத்து" என்பதனை உணர்ந்திலன். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்—மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றுந்த மெய்யறிவு விளக்கம் வாய்க்கப்பெறாத ஆணவமலத்தடிப்பினால் பிணிப்புற்ற சூரபன்மன் இவ்வாறு செய்தல் இயற்கைதானே.

சூரபன்மனுக்கும் முருகனுக்குமிடையில் கடும்போர். இருதிறப் படைகளும் தமது வல்லமையினை முடிவுபோகக் காட்டச் சித்தமாயினர். தேவரும் அசுரரும் போரின் முடிவினை அறிந்து வெற்றிமுரசு முழக்குவதற்கு எதிர்பார்க்கின்றனர். சூரன் படைகள் மேன் மேலும் தோல்வியை அடைகின்றன. அசுரர் உளத்தளர்ந்தனர். சூரபன்மனது கலங்காத உள்ளமும் கலங்கியது. எல்லையற்ற வரங்களாற் பெற்றருட்சிகளை முடிவுபோகக் காட்டினன். அவைகளாவும் பயன்படாவாயின. முருகனைத் தனது ஆற்றல்கொண்டு வெல்லுதல் அரிதென உணர்ந்தான். பாலனென்று எள்ளிய அவனது உளம் அவனையே வெறுத்தது. முருகன் எல்லையற்ற பரம்பொருள் தானேயென அவன் ஐயுறவுகொண்டான். இவ்வாறு அவனது எண்ணங்கள் யாவும் மாற்றமடையுங் காலத்தில் முன்னை வேட்ட வாத்தின்படி சிங்கன், தாரகன் ஆதியோர்க்குக் காட்டாத தமது திருவுருவத்தை முருகன் இவர்க்குக் காட்டலாயினன். அக்கோலத்தினைத் தேவர்கள் உணர்ந்தனர். அவ்வுருவத்தின் சிறப்பினைக் கூறும் கந்தபுராணச்செய்யுளை ஈண்டு நோக்குக.

"கருணைகொள் விழியிற் சோமன்
கதிரவன் செவியிற் றிக்குத்
திருவுதற் குடினை வைப்புச் சென
னியிற் பரம வானமா
மரபினின் மேவித் தோன்றமாதிலா
திருக்குத் தொகலை
பொருதன தருவக்காட்டி நிற்றனு
முபயர் கண்டார்."

என்பது அச்செய்யுள்.

ஆன்மாக்களின் தியான பாவனை பூசனைகளின் பொருட்டு ஆகமங்களில் விதிக்கப்படக் கூறப்படும். மற்றைய மூர்த்தங்கள் போலாது இவ்விச்சுருபம் பெரும்பாலும் ஆன்மாக்கள் பரம்பொருளாகிய தம்மை அவமதித்தும் அகங்கரித்தும் மயங்கிய காலங்களிலேமாத்திரம் சர்வப்பிரபஞ்சப் பொருட்களும் தமது வியாபியமாய் அடங்கத் தாமே சர்வவியாபகராய் இருக்கும் முழுமுதற் பொருளென்பதை அவர்க்கு உணர்த்துமாறு இறைவன் அவ்வக்காலத்துக் கொள்ளும் திருமேனியாதலால் இவ்வடிவம் சர்வமும் அடங்குதலையாத்திரம் இன்றியமையா இலக்கணமாகக் கொண்டு ஏனைய வற்றை நியதிப்படக் கொள்ளாததாய்க் காணப்பட்டதென்க.

செஞ்சுடர் சனகோடி செறிந்தோருங் கிண்டியது போன்று ஒளிகாலும் வடிவைநோக்கி விண்ணோர் உளக்குளவினர். உய்கையாற்சு முதனர். இவ் வியன்பெரு வடிவைக் கண்டான் சூரன். விம்மிதமடைந்தான். அப்போது ஆறுமுகவள்ளல் அவனுக்குச்சிறிது மெய்ஞ்ஞானத்தைப் பாலித்து அவனுகச் சந்தித் தனது அக்தக்கரணங்கள் யாவும் பகையியல்பு நீக்கப் பின்வருமாறு கூறுகிறான்.

எண்ணிலா அவுணர்தானை யாவற்றையும் இமைப்பினில் அழித்து, எனது உறவினராகிய சகோதரர் புத்திரர் ஆகியோரையும் எலாம் பெயருமில்லாதொழியும்படி கீர்மூலமாயொழித்து, ஆயத்திற்றன்கு மண்டலங்கடோறும் தொடர்ந்து என்னுடன் போராற்றி, இறைவனிடம் அரிதாகப்பெற்ற வரங்களும் பிசகமுடியாத இந்திரமாஞாலம் இதனையும் திரும்பிவாராவண்ணம் தடுத்தனரே. எனது திண்டிறற் படைகளாயவும் தம்மைத் தாக்காதபடி கைப்பற்றியளித்தும் அகற்றிக் கொண்டு யான்கொண்ட மாயைகள் யாவற்றையும் சாமானிய அம்புகளினால் ஒழித்து, சர்வமுமாகிய வடிவங்கொண்டு எனது கண்முன் கின்றனரே.

"கோலமா மஞ்ஞை தன்னிற் குல
விய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தே னன்னாட் பரி
சினை உணர்ந்திலேனே
மாலவன் தமக்குமேனை வானவர்
தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம்
மூர்த்தி யன்றோ."

சிலதினங்களுக்குமுன்னர் என்னிடத்துத் தூதுவனாய்வந்த வீரவாகு என்போர் வேற்படை கையிற் கொண்ட இச்சிவகுமாரரை விருப்பு வெறுப்புக் கடந்தநின்ற பராபரவஸ்து என்றே இடித்துக் கூறவும் உண்மையுணராத நான் அவற்றை உறுதிமொழிகளென்று சொண்டேனில்லை. அக்காலில் அவ்வாறு கொண்டேனுயின் இக்கால் இவ்வாறு ஏராமாட்டேன். யான் பெற்ற ஆயிரத்தெட்டு அண்டங்களும் அனந்தகோடிகளும் முருகனது வடிவத்தின் திருமயிராகிய அழகையுடைய திருவடிச்சேரமத்திலே காணப்பட்டுக் கொண்டு இருக்கின்றனவே. இவ்விறைவர் தாங்கிய இத்திருமேனியின் உயப்பழகு அனைத்தையும் குறித்துணர்வோர் யார்? இச்சிவகுமார்கொண்ட தெய்வத்தன்மையமைந்த திருமேனியின் ஒளி, சிறப்பு, வனப்பு ஆகியவற்றை முழுவதும் யான் பார்த்த போதும் எனது கண்களும் மனமும் திருத்தியடைகின்றனவில்லையே. இச் சிவகுமாரர் கொண்ட வடிவைப்பார்த்துத் தேவர்களாயினும் மிகப் பயங்கரமுறமல் அகலவரேயன்றி அஞ்சாது நின்றனர் நிற்பவர்யார்? சிறந்தவழிபாடாத்தைப் பெற்றிருந்தேனுதலின அவ்விசேடத்தால் அஞ்சாது பார்க்கப்பெறுகிறேன். ஆயிரங்கோடி அழகு திரண்டாலும் இவர்கொண்ட வடிவை ஒக்குமா? எனது உயிர்போன்ற இளவலும் இணையசேயும் என்னை நோக்கி, 'அரசே! இச் சிவகுமாரைப் பாலனென அவமதியாதீர். பிரம விஷ்ணுக்களாலும் காணமுடியாத பரமசிவனேயாவர்' என இடித்துக்கூறினர்களே. இப்பொழுதே இவ்வுண்மைகள் யாவும் புலப்படுகின்றன. அடியேனுக்கு இப்பெருமானிடத்து அன்பு உதித்தது. உள்ளம் நெக்குநெக்கு உருகியது. என் புதாலும் உலைமெழுகுபோல உருகுகின்றது. கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் பெருகியது. உரோமஞ் சிலிர்ப்படைந்தன. திருகிய வெகுளிதீர்ந்தது எனது கோபமுழுவதும் அடங்கிவிட்டது. யுத்தத்திலே எழுந்த மனவெழுச்சி சேர்ந்துவிட்டது. அகங்காரம் அடங்கிவிட்டது. வலதோள் துடித்தல், வலக்கண் துடித்தல் முதலாகிய நற்சகுனங்கள் நிகழ்கின்றன. எல்லாப் பொருட்களும் வெளிப்படுத்த தோன்றாத இடமான சிவகுமாரின் பரமேச்சுர வடிவத்தைத் தரிசிக்கப்பெற்றேன். இவ்வாறு தரிசிக்கப்பெற்றது யான

தொடர்ச்சி 4-ம் பக்கம்

பிரயாணிகள் நால்வர் கொலையா?

மோட்டார் பஸ் எரிக்கப்பட்டதாம்

பதுளை ஜன 17

மோட்டார் பஸ்ஸிற் பிரயாணஞ் செய்த நால்வர் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு செய்தி இன்று பதுளைக்கு எட்டியது.

பிபிலைக்கும் மொனராகலைக்குமிடையிற் போக்குவரத்துச் செய்யும் குறித்த பஸ் நேற்றிரவு பசினிகதுராயவிலில் தீ வைக்கப்பட்டு நாலு பிரயாணிகளும் கொல்லப்பட்டனரென்று தெரிகிறது.

நீதிபதி திரு. ஏ. எஸ். வணிகசூரிய கொலை நடந்ததாகச் சொல்லப்படும் இடத்துக்குச் சென்றார். உதவிப் பொலிஸ் சுபரிண்டெண்ட் திரு. ஜே. ஜி. டி. சோமும் இன்ஸ்பெக்டர், டப்ளியூ பி. பெர்கின்ஸும் கொன்ஸ்டபிள்களோடு பொலிஸ் மேற்படி ஸ்தலத்திற்கு விரைந்து சென்றனர்.

இச் சம்பவம்பற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது.

களுத்துறைப் பட்டினசபை உபதேர்தல்

களுத்துறை ஜன 17

களுத்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று நடைபெற்ற பொழுது நியமன அங்கத்தவர் மிஸ்டர் எச். ஓ. டப்ளியூ. ஒபயசேகரா 1942-ம் வருடத்திற்குச் சபையின் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய பெயர் மிஸ்டர் எஸ். டப்ளியூ. பீரிஸாற் பிரேரிக்கப்பட்டு மிஸ்டர். ஏ. வி. எம். மதூரசிங்ஹ ஆமோதிக்கப்பட்டது.

இந்தியாவின் புதிய சேனாதிபதி

ஜெனறல் காட்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்

லண்டன், ஜன 16

ஜெனறல் ஸேர். ஆர்ச்சிபால்டு வேவலுக்குப் பதிலாக ஜெனறல் ஸேர். அலென் பிலெமிங் ஹார்ட்லி இந்தியாவின் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, வைஸ்ராயின் நிர்வாகசபையிலும் அவர் ஒரு ஸ்தானம் பெறுகிறார். இந்திய இராணுவ இலாகாத் தலைமை அதிகாரியாக லெப்டினண்ட் ஜெனறல் ஏ. எல். மோரிஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவை யுத்தகால நியமனங்களாகவும், அவற்றின் காலவரையறை இராணுவ நிலைமையைப் பொறுத்ததாக விருக்குமென்று லண்டனில் அதிகாரமுறையில் அறிவிக்கப்பட்டது.

ஜெனறல் ஹார்ட்லி மன்னர்பிரானின் பிரதம மெய்ப் பாதுகாவலராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ருஷியாவுக்குப் புதிய பிருத்தானிய ஸ்தானிகர்

லண்டன, ஜன, 16—

மொஸ்கோவிலுள்ள பிருத்தானிய ஸ்தானிகரான ஸேர். ஸ்டாபோட் கிரிப்ஸ் தாமதுசொந்த இஷ்டத்தின்பேரில் அப்பதவியிலிருந்து விலகுகிறார். அவருக்குப்பதில் இப்பொழுது சீனாவிலுள்ள பிருத்தானிய ஸ்தானிகரான ஸேர். ஆர்ச்சிபால்டு கிளார்க் கேர் நியமிக்கப்படுக்கிறார். அயலநாட்டு மந்திரி காரியாலயத்தின் உதவிக் காரியதரிசியான ஸேர். ஹோரேஸ் சேமர் சீனாவுக்குப் பிருத்தானிய ஸ்தானிகராக இருப்பார்.

ஸேர். ஸ்டாபோட் கிரிப்ஸ் விரைவில் பிரிட்டன் திரும்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாத்மாவின் மணிமொழிகள்

அகில இந்தியக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் நிகழ்த்திய பேச்சு

அகில இந்தியக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக் கூட்டம் இம்மாதம் 16-ந் திகதி இரவு 8-30 மணிக்கு முடிவடைந்தது. கூட்டம் முடிவதற்கு முன், பர்டோலித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு நிர்மாணத் திட்டம் பற்றிக் காங்கிரஸ் காரர்களுக்குக் காரிய நிர்வாகசபை விடுத்திருந்த உத்தரவுகளும் அங்கீகரிக்கப்பட்டன.

பண்டித நேரு பர்டோலித் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

மொத்தம் 219 அங்கத்தினர்களில் 15 பேர் தான் தீர்மானத்திற்கு விரோதமாக வாக்களித்தனர்.

அக்கூட்டத்தில் மகாத்மாகாந்தி 60 நிமிஷங்கள்வரை தொடர்ந்து பிரசங்கஞ் செய்தார். அஹிம்ஸாக் கொள்கையைப் பாப்பவிடாமல் கம்மைப் பிருத்தானிய அரசாங்கம் தடுத்தாலும் அவர்களிடம் தாம் சிறிதும் விரோதம் பாராட்டப் போவதில்லையென்று காந்திஜீ தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:-

"இத்தாலியர்களுக்காவது விரோதமாகக்கூட, நான் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதை விரும்பவில்லை. பிருத்தானியர் இப்போது ஈடுபட்டுள்ள உயிர்ப் போராட்டத்தில் அவர்களுக்காக நான் எனது உயிரையுந் தியாகஞ் செய்வேன். அப்படியிருக்க, பிருத்தானியர் மீது எவ்வாறு நான் பலாத்காரத்தைப் பிரயோகிக்க முடியும்? எவரிடத்திலும் எனக்கு விரோதமில்லை.

இப்பொழுதைய நிலைமைகளைப் பொட்டியே பர்டோலித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆகவே, பர்டோலித்தீர்மானத்திற்கும் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துவதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை."

சிங்கப்பூரில் இறைச்சிக் கட்டுப்பாடு!

சிங்கப்பூர் ஜன 16

இறைச்சி விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு உணவுப் பொருட் கட்டுப்பாட்டு அதிகாரி ஆலோசித்து வருகிறாரென்று அறிவிக்கப்பட்டதன் மூலம், சிங்கப்பூர்ச் சனங்கள் மேற்கொண்டு தங்கள் உணவைச் சுருக்கிக் கொள்ளத் தயாராகி வருகிறார்கள்.

இந்தியாவின் புதிய சேனாதிபதி

ஜெனறல் ஹார்ட்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்

லண்டன், ஜன, 15-

ஜெனறல் ஸேர். ஆர்ச்சிபால்ட் வேவலுக்குப் பதிலாக ஜெனறல் ஸேர். அலென் பிலெமிங் ஹார்ட்லி இந்தியாவின் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, வைஸ்ராயின் நிர்வாகசபையிலும் அவர் ஒரு ஸ்தானம் பெறுகிறார். இந்திய இராணுவ பகுதித் தலைமை அதிகாரியாக லெப்டினண்ட் ஜெனறல் ஏ. எல். மோரிஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவை யுத்தகால நியமனங்களாகவும் அவற்றின் காலவரையறை இராணுவ நிலைமையைப் பொறுத்ததாக விருக்குமென்று லண்டனில் அதிகாரமுறையில் அறிவிக்கப்பட்டது.

ஜெனறல் ஹார்ட்லி மன்னர்பிரானின் பிரதம மெய்ப் பாதுகாவலராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்புக் கூடங்கள்

[அரசாங்கத்தார் விடுத்துள்ள அறிவித்தல்]

யுத்தம் ஆரம்பித்த நாள்முதலாகக் கொழும்பு நகரத்திலுள்ளவர்களுக்குப் பாதுகாப்பான ஒதுக்கிடங்கள் அமைக்கும் பிரச்சினை அடிக்கடி எழுப்பப்பட்டிருக்கிறது. இப்பொழுது தூரக்கிழக்கிலே (கிழக்காசியாவிலே) ஏற்பட்டிருக்கிற நிலைமை காரணமாக இவ்விஷயத்தைப் பற்றிப் பின்வரும் அறிக்கையை வெளியிடுவது அவசியமாயிற்று.

2 இரண்டு விதமான ஒதுக்கிடங்கள் உண்டு. ஒன்று குண்டுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கானது. மற்றது வெடித்த குண்டிலிருந்து சிதறுகின்ற துண்டுகளுக்குப் பட்டாமற் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு ஆனதாகும். முந்தினது நேரே தலைமீது விழும் குண்டுகளினின்றும் பாதுகாக்கத் தக்கதாய அமைக்கப்படுவது. இதன் பொருட்டு அது தரைமட்டத்திலே கீழே ஆழத்திலே கட்டப்படல் வேண்டும் மல்லது பிரத்தியமாயிருந்தால் மண்ணைக் குடைந்து அதனை அமைக்கப்படல் வேண்டும். அல்லது தரைமீது நிறுதாகவேனும் புதிதாகவேனும் மிகவும் மொத்தமான கொங்கிறீற்றினாலே சுவர் பூசி மூடிக் கட்டல் வேண்டும்.

ஒரு பாகம் தரையின் கீழும் ஏனைய பாகம் தரையின் மேலுமாகப் பெரிதமான கொங்கிறீற்றினாலே கட்டி அதை மண்ணினால் மூடி ஒரு சிறு பருக்கையின் குகைத் தரை உருவிக் கொடுப்ப தென்றாலும் பெருந்தொகைப்பணம் மிகவும் செலவாகும். குடிசனம் மிகவும் நெருக்கமாயிருக்கு மிடத்திலே கட்டாயம் அடிக்கடி கடுமையான அழுக்குகள் நடைபெறுமென்று கண்டால் அந்த இடத்தில் மாத்திரம் அப்படிப் பொருட் செலவைப் பொருட்படுத்தாமல் விசேஷ பாதுகாப்பு அமைத்துக் கொள்ளுவது பொருத்தமாகும். இங்கிலாந்திற்கூட லண்டனிலே நிலத்தின் கீழ் நடக்கும் (டியூப்) குழாய்ப் பாதைகளை யுடைத்தாக் குடைந்த வழிகள், செங்குத்தான கணவாய்கள் குன்றுகளிருக்குமிடங்கள் ஆகிய இவைகளைப் போல பிக்க வசதி வாய்ந்த இடங்களிலன்றி மற்றவிடங்களிலே இந்த ஒதுக்கிடங்கள் அமைக்கப்படவில்லை.

3 வெடித்த குண்டின் சிதறுதுண்டுகளிடமிருந்து காப்பாற்றுதற்கு அமைத்த ஒதுக்கிடங்கள் சாதாரணமாக 50 அடிக்கு அப்பால் விழுந்து வெடிக்கிற 500 ராத்தல் எடையுள்ள குண்டுகளின் துண்டுகளிடமிருந்து காப்பாற்றும். கீழ்த் தரப்படுவனவே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன:-

A தரைமட்டத்தின் கீழ் 3 அடி முதல் 6 அடிவரைக்கும் சுமார் அகழிகள் கிடங்குகள் வெட்டிக் கொள்ளுதல் ஒருவகையாகும். வெட்டியெடுத்த மண்ணை மேலே இரண்டு பக்கங்களிலும் சுவர்போல எழுப்பிக் கொண்டால் அது மேலதிகமான பாதுகாப்பாகும். சில விடங்களிலே மேலுக்கு மரங்களை யாவது இரும்புத் தகடுகளையாவது போட்டு மண்ணும் மூடிக் கொள்வார். இந்தக் கிடங்குகளின் பக்கங்களை சரியாக வெட்டப்பட்டிருக்கும், மண் இடிந்து விழாதபடி அவைகளைத் தாங்கும் சுருள் அலவக் கற்றுச் சுவர்களும் கட்டப்பட்டிருக்கும்.

B ஆழமில்லாத கிடங்குகளிலே அகலங்களுக்கு மேலாக அவைகளைப் போல வளைந்த இரும்புத் தகடுகளை அமைத்து அதனை ... மண்ணைப் போட்டு மூடிக்கொள்ளுதல் இன்னொருவிதமான பாதுகாப்பு முறையாகும். இவை அன்

தொடர்ச்சி 3ம் பக்கம்

வாரவழிபாடு

திரு ச. சச்சிதானந்தம்பிள்ளை

(முற்றொடர்)

(ஈ) சமயபோதனை: பல காரணங்களால் தற்காலத்தில் இந்தச் சிறுவர் சிறுமியர்கட்குத் தம் சமயத்தைப்பற்றியுள்ள அறிவு மிக மிகக் குறைவு. பெரும்பாலும் இவர்கள் வீட்டிலும் பாடசாலையிலும் இவர்கட்குச் சமய அறிவு புகட்டப்படுவதில்லை. இவர்கள் முதியோராய் வாழ்க்கைத் துறைகளில் இறங்கிய பிறகும் இவர்கள் சமயஞானம், ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றங்கட்கும் உட்பட்டதாயிருக்கின்றது. வாழையடி வாழையாய் அஞ்ஞானக்கூட்டம் அதிகரித்துவிட்டது. ஆகையால், வேதாகமங்களின் அடிப்படையான கோட்பாடுகள், அவரவர் சமயங்களின் சிறப்புக் கொள்கைகளின் முக்கியமானவைகள், இன்றியமையாத நிலைகள், சமய அநுட்டானங்கள், பூசை முறைகள், ஆலய அமைப்புகள், ஆலய நித்திய நைமித்திகங்களின் நோக்கங்கள், மூர்த்தி தத்துவங்கள், சமயப் பெரியார் வரலாறுகள் முதலியவற்றைப் பற்றிக் கற்றோர் மட்டுமன்றி, ஆண் மக்கள் பெண்மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளும் அளவில், முறையில், சமயபோதனை வாரந்தோறும் நிகழ்ந்து வருதல் வேண்டும். அருள்பெற்ற ஆன்றோர் சரிதங் கூறுதல், அவர் வாக்குகளின் பொருளை விளக்குதல் முதலிய பல முறைகளைப் பின்பற்றி இத்தொண்டினை நிகழ்த்தி, பொதுமக்களது சமய அறிவை வளர்த்து வருதல் வேண்டும். இது நிகழுமாறு செய்யுங்கால், சில எச்சரிக்கைகளைக் கவனித்தல் வேண்டும். (i) சமயபோதனை செய்வோர், தாம் போதிக்கும் விஷயத்தில் உள்ளபடி நம்பிக்கையும் அன்பும் உடையராயிருத்தலோடு, யாவரும் விரும்பும் ஒழுக்கமுடையராயிருத்தல் வேண்டும். (ii) போதனையானது, கேட்கும் பொதுமக்கள் அறிதற்கு எளிதில் எட்டும் அளவினதாக இருத்தல் வேண்டும். கடினமான தத்துவ சாஸ்திர நுட்பங்களை விளக்குத லொழிந்துவதாயிருத்தலாகாது. *தூய வாழ்க்கையில் விருப்பும், இறைவனிடத்தில் உள்ளக் கசிவும், உயிர்களிடத்து அருளும், ஒற்றுமை உணர்ச்சியும் விளைப்பதே இப்போதனையின் பெரும் பயனாக இருத்தல் வேண்டும். இவற்றை விளைக்காத வெறும் பாண்டித்தியமும் சொற்சாலமும் சிறிதும் வேண்டற்பாலனவல்ல. (iii) சிவாலயங்களிற் சைவ நூல்களும் சிவ சரிதங்களும் விளக்கப்படுதல் இயல்பாம். இதுபோன்ற தொரு முறையே விஷ்ணுவாலயங்களில் நிகழும் வாரக் கூட்டப் பிரசங்கங்கட்கும் ஏற்றதாகும். ஆனால், எக்கூட்டத்திலும் பிற சமயங்களையும் பிற இனமக்களையும் குறைவாகப் பேசுதல் சிறிதும் விரும்பத்தக்கதன்று. பிறசமயங்களில், வையற்றில சாத்திரங்களில், உள்ள ஒற்றுமைப் பகுதிகளையும் நலங்களையும் அன்போடு பாராட்டிப் பேசுதல் அனைவர்க்கும் நன்மையாம். அது வாய்க்காத இடத்து, பிற சமயங்களைப்பற்றி ஒன்றும் சொல்லாது விடுதலே நலம். அன்பும் ஒற்றுமையும் இந்திய சமூகத்தினிடையே வளர்தல் அவசியமாதலின், சமய போதனை செய்யும் பெரும் பொறுப்புடைய அறிஞர்கள் * யாவரும் இந்த அறநெறியைக் கடைப்பிடித்துத் தமது கடமையைச் செய்தல் வேண்டும். வாரவழிபாட்டில் சமயபோதனை 30 அல்லது 35 நிமிடத்திற்குள் முடிதல் வேண்டும்.

(உ) மோனத் தியானம்: இட்ட மூர்த்தத்தைத் தியானிப்பதிலோ, அல்லது சமயபோதனையில் கேட்ட நற்பொருளைச் சிந்திப்பதிலோ இதற்கெனத் தரும் சிறுபொழுதைச் செலவிடுதல் வேண்டும். வழிபாட்டிற்கு வந்தோர் அனைவரும் சுகாசனத்தமர்ந்து, மன அலைகளை அடக்கி, அதனை ஒருமுகப் படுத்தி, நற்பொருளில் நாட்ட முயலுதல் வேண்டும். முழு அமைதி நிலவுதல் வேண்டும். இதற்கு மூன்று நிமிடகாலம் போதுமானது. இது தொடங்கு நிமிடத்தையும் முடியு நிமிடத்தையும் கைமணி யோசை யால்-அல்லது இறைவன் திருநாம சப்தத்தால்-சமூக விளம்பரர் தெரிவிக்கலாம்.

(ஊ) வாழ்த்து: மௌனத் தியானம் கழிந்த பின்னர், ஆன்றோர் உலகுய்ய அருளிய வாழ்த்துப்பாட்டொன்றைப் போதகர் பாடி வாழ்த்தலாம். உன்னதத்தை சுவரும் பெரு நிகழ்ச்சி உலகில் யாதாமொன்று நிகழ்ந்ததாயின், அதுபற்றி ஆண்டவனை நோக்கிக் கூட்டத்திலிருந்து ஒருவர் விண்ணப்பித்தலும் அவ்வப்போது ஏற்றுக்கொள்ளலாம். இதற்கெல்லாம் சுமார் இரண்டு நிமிடம் சாலும்.

(எ) வழிபாடு: பின்பு வழிபாட்டுக் கூட்டத்தாரனைவரும் எழுந்திருந்து உட்பிரகாரத்தில் வலம் வந்து, சுவாமி சந்நிதியை அடைந்து, அமைதியாய் இருமருங்கும் நிற்றல் வேண்டும். உடனே கற்பூர தீபாராதனை மட்டும் நிகழ வேண்டும். நிவேதனம் அருச்சனை முதலிய நிகழ்ச்சிகள் இவ்வேளைக்கு ஏற்புடையனவல்ல. சுவாமிப் பிரசாதத்தை-திருநீற்றை அல்லது தீர்த்தம் துளசியை-வழங்கும் அன்பர்களுக்குள் எவ்வித ஏற்றத்தாழ்வும் காட்டாது, சமபாவனையுடன், அவரவர் நித்த சேர்த்த முறையையே தொடர்ந்து வழங்குதல் வேண்டும். இல்லாம் மார்க்க வழிபாட்டில் இப் பெருநன்மை பொதிந்து அச் சமூகத்தினர்க்குள் சகோதர ஒற்றுமையை வளர்த்தலும் உண்மையை உணர்ந்து அம்முறை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

*குறிப்பு—"சிவவழிபாட்டிற்கு அல்லற் பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும், இவையில்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியத்தைக் கொள்ளாமலும் தின்கின்ற மருந்துக்குச் சமானமாகும்."—ஆறுமுகநாவலர். [இம்மேற்கோள் 1938-ல் வெளிவந்த நாவலர் நினைவு மலரில் 70-ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.]

* இவர்கள் இயம நியமப் படியேறி, சமய தீக்ஷை பெற்று, சமயாசாரமுடையராய் இருத்தல் வேண்டும். அன்றியும் தற்கால உலகியற் கல்வி போடு (6-ம் பாரப் படிப்பு சாலும்) போதியவளவு தமிழ்நூற் பயிற்சியும் உடையராயிருத்தல் வேண்டும். இவர்கட்குச் சமய நூல்களை முறையாய்க் கற்பிக்குந் தாபனங்களை அமைத்தலும், அவற்றில் இவர்களை நன்றாய்ப் பயில்வித்துச் சமயப் பிரசாரத்திற்கென அனுப்புதலும் ஆலயங்களும் மடங்களும் செய்ய வேண்டிய தலையாய கடமைகளாகும். சமயப் பணியைக் காலத்தின் அவசியமறிந்து செய்தல் வேண்டும். இக் கடமை புணர்ச்சியானது திருவருளின் தூண்டுதலால் தமிழகத்துக் கோயில்கள் மடங்கள் சிலவற்றில் தோன்றி உரம்பெற்று வருகின்றது. இவைகளின் அதிபர்கள் இந்தப் பேருபகாரத்தைச் செய்து அதிருவெல்லாம் போற்றும் பெருமையை விரைவில் பெறுவார்கள் என்று தமிழுலகம் எதிர்பார்க்கின்றது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த போதகர் கிடைக்கும் வரையில், பெரிய ஊர்களில் வாழும் கல்வி யொழுக்கமுள்ள நல்லோர்கள் தம்மூரின்மட்டுமன்றிச் சுற்றிலுமுள்ள சிற்றூர்கட்கும் சென்று தமக்குத் தெரிந்த அளவு சமயபோதனை செய்யலாம். [உதாரணம்: ஆலயச் சரித்திரப் பிரசங்கித்தல், அது முடியாவிடத்து அதனைப் படித்தல், அதனோடு சேர்த்து செம்பாகமான தோத்திரப்பாக்களைப் பாராயணஞ் செய்தல், நல்ல நூல்களைப் பிரசாரகளைப் படித்துப் பொருள் விளக்கல்]

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஹு
தைமீ ௨௨ வியாழக்கிழமை

யப்பானியரின் சூழ்ச்சி

இப்பொழுது பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்கும் மாறாக யப்பானியர் மலாய்நாட்டிலும் பசிபிக் சமுத்திரத்திலும் சமர்புரிவதைக் கொண்டு அந்த யப்பானியர் கொண்ட நோக்கமென்ன வென்பதை நாம் ஒருவாறு யூகித்து அறிதல் முடியும். பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்கும் உரிய கப்பல்கள் வடபசிபிக் சமுத்திர மூலமாகப் புறப்பட்டு ஆங்காங்குள்ள ஊர்களுக்குச் சென்று சென்று வியாபாரத்தை விருத்திபண்ண வொட்டாது தடுப்பதே யப்பானியரின் நோக்கங்களுள் ஒன்றாகுமென நாம் நினைத்தலாகும்; பசிபிக்சமுத்திர மூலமாகப் பிரயாணஞ் செய்யுங் கப்பல்கள் சில சந்தர்ப்பத்தில் நாலாயிரம் மைல்களுக்குக் குறையாமல் ஓடவேண்டி யிருப்பதால், இக்கப்பல்கள் கரி முதலிய உபகரணங்களின் பொருட்டு இடையிடையே தங்கி நின்று ஓடவேண்டுமே யொழிய நேரே ஓரோட்டத்தில் ஓடுதல் முடியாதாகும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்தே அமெரிக்கர் பேர்ள் துறைமுகம் ஹவாய்த் தீவுகள் மத்திய பசிபிக் தீவுகள் முதலிய பல தானங்களைப் பெருந்தொகையான பணத்தைக் காலந்தோறுஞ் செலவிட்டுத் தம் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் வியாபாரஞ் செய்யத் தொடங்கினர்; இப்படியான நோக்கத்துடன் அமெரிக்கர் யோக்கொகாமாவிற் கணித்தாகவுள்ள குவாம் என்னும் துறையிலும் தங்கள் ஆதிக்கத்தைப் பெலப்படுத்தினர்; இதனைக் கண்டு யப்பானியர் தங்கள் வியாபார விருத்திக்கு இச்செயல் இடையூறுமென வெண்ணி ஆத்திரங் கொண்டனர். இதற்குக் காரணம் இவ்விரு சாதியாரும் வியாபார விஷயமாக இயல்பாகக் கொண்டுள்ள எதிரிடையேயாகும்.

இந்த நோக்கம் பற்றியே யப்பானியர் இப்பொழுது அமெரிக்கருடன் மாறுபட்டு பிலிப்பைன் தீவுகள் ஒல்லாந்த கிழக்குத் தீவுகள் முதலியவற்றைத்தாக்கிப் பற்றமுயலவாராயினர். இந்த இடங்களெல்லாம் அமெரிக்க கப்பல்கள் தங்குமிடமாகவும் தண்ணீர் கரி முதலியன பெறும் இடமாகவும் உள்ளன. யப்பானியர் சுமாத்திரா போர்ணியா செலிபிஸ் என்னுமிடங்களைத் தாக்குவதும் அமெரிக்கருடைய வியாபாரக் கப்பல்களின் போக்குவரவைத் தடுத்தற்கே யெனலாகும்; இந்த இடங்கள் இந்து சமுத்திரம் அதைச் சேர்ந்த வங்காள விரிகுடா அது வாயிலாகச் சிங்கப்பூர் என்னுமிவைகட்குக் கப்பல்கள் செல்லும் மார்க்கத்திலுள்ளன.

இனி, சிங்கப்பூர் மலாய்நாடு முதலியவற்றிற்கு யப்பானியர் இலகுவில் வழி காணுகின்றனரென்றவுடனே எங்கள் பிருத்தானியர் வாளாவிருத்தல் முடியாது; அவர்களும் யப்பானியரைத் தடுக்கும் விஷயத்தில் அமெரிக்கருடன் சேர்ந்து போராற்ற நேரலாயிற்று. சிங்கப்பூர் பிருத்தானியருக்கு, கிழக்குப் பகுதியில ஒருசிறந்த கடற்படை ஸ்தானமாகும்.

மேலும் சுமாத்திரா யப்பானியர் கைப்பட்டால், சுண்டா நீரிணை மூலமாக யப்பானியர் இந்து சமுத்திரத்திற்கும் அதைச்சேர்ந்த வங்காள விரிகுடாவிற்கும் தட்டுத் தடையின்றி வருதலாகும். அப்பொழுது சிங்கப்பூர் அவர்கள் நோக்கத்திற்கு அதிக தடையாக இருக்கமாட்டாதெனலாம். இதனையிட்டே பிருத்தானியர் யப்பானிய கடற்படை இந்து சமுத்திரம் வங்காளவிரிகுடா என்னுமிவைகளுள் இலகுவாகப் புகாதவண்ணம் பாதுகாப்போடு இருக்கலாயினர். யப்பானிய கப்பலின் போக்குவரவை யுத்தகாலத்திலே தடுப்பதற்குப் பிருத்தானியர் இரண்டு கருமஞ்செய்ய வேண்டும். ஒன்று வங்காள விரிகுடாவிற்கு மலாக்கா நீரிணை மார்க்கமாக யப்பானிய கப்பல்கள் வரவொட்டாது தடுக்க வேண்டும்; மற்றையது இந்திய ஆக்கிப் பலக்கோவுக்குரிய நீரிணை வாயிலாக அவர்களுக்குரிய கப்பல்களின் செலவைத் தடுக்க வேண்டுமென்பதாம். இதில் முதற் சொன்ன மார்க்கத்தைத் தடுத்தற்குவழி சிங்கப்பூர்க் கடல்தானத்தைப் பெலப்படுத்தி, தென் சீனக்கடல், யாவாக்கடல், மலாக்கா நீரிணை யென்னுமிவற்றிற்கு ஊடாகயப்பானியகப்பல்களைச் செல்ல வொட்டாது தடுத்தலாம்; இந்தத் தடைகளை உத்தேசித்துப்போலும் யப்பானியர் சிங்கப்பூரைத் தரைமார்க்கமாகத் தாக்க முயன்றனர்; கோலாலம்பூரை யப்பானியர் கைப்பற்றியது பிருத்தானிய அரசினருக்குப் பெரும் இடையூறாகும். ஏன்? மலாய்நாட்டின் பிரதான புகைரதப் பாதைகளும் சமாசாரப் போக்கு வரவுக் கருவிகளும் பிறவும் கோலாலம்பூரிலேயேயுள்ளன; மேலும் தைலாந்து இந்து சீனம் முதலாமிடங்களிலிருந்து அரசினருக்குத் துணைப்படை வருவதற்குக் கோலாலம்பூரிலுள்ள புகைரதப் பாதைத் தொடர்களே பிரதானமான மார்க்கங்களாகும். மேற்குக் கரைப் புகைரதம் கிழக்குக் கரைப் புகைரதத்தைச் சந்திக்கும் பிரதான சந்தியாகிய ஜும்மாஸ்தானம் கோலாலம்பூருக்கு அதிகதூரத்தில் உள்ளதன்று. ஈப்போவும் கோலாலம்பூருமே பிரதான புகைரத ஸ்தானங்களாகும். ஈப்போவிற் பல பிரதானமான தொழிற்சாலைகள் உண்டு; மேலும் மலாய்நாடு முழுவதற்கும் தலைப்பட்டினமாகவுள்ளது கோலாலம்பூரேயாகும். இப்பிரதான பட்டினத்தை இழந்தமை கவலைக்கிடமானதென்பது மெய்யே. ஆனால் இதை இழந்தமை காரணமாகச் சிங்கப்பூரைப் பாதுகாத்தல் முடியாதென எவரும் தவறாக எண்ணிவிட வொண்ணாது.

சிங்கப்பூரைக் கடைசி வரையிற் பகைவரிடமிருந்து காக்க வேண்டுமென்பதே பிருத்தானியர் அமெரிக்கர்களுடைய நோக்கம்; இல்லாவிட்டால் வங்காள விரிகுடாவுக்கூடாக வியாபாரஞ் செய்யின் பர்மா ஒல்லாந்த கிழக்குத் தீவுகள் என்னுமிவைகளையே தானமாகக் கொண்டு செய்யவேண்டி நேரிடும். ஆனால் சிங்கப்பூரைப் பகைவர் தரைமார்க்கமாகக் கைப்பற்றுதல் முடியுமென்பதை எவரும் அறிவர். இரங்கூன் மோல்மின் முதலிய இடங்களில் யப்பானிய ஆகாயப்படை வெடிகுண்டு பெய்ய முயல்வதும் மேலே சொல்லப்பட்ட நோக்கங்களைக் கெடுத்து விடுதற்காகத்தான். இவைகளையெல்லாம் உணர்ந்தே இப்பொழுது சேனாபதி உவேவல் ஜாவாவிலுள்ள சுறபயா என்னும் தானத்தைத் தம்முடைய பிரதானமான யுத்த முயற்சி ஸ்தானமாக்கி இருக்கின்றார். இவற்றையெல்லாம் உத்தேசிக்குமிடத்துப் பிருத்தானியரும் அமெரிக்கரும் ஆவசியகஞ் செய்யவேண்டிய தொன்றுண்டென்பது புலப்படும். அஃதென்னையெனில், கிழக்கே யப்பானியராகியபகைவர் பராக்கிரமும் பெறுவதற்கிடையில் பிருத்தானியரும் அமெரிக்கரும் கப்பல்கள் கடற்படை தரைப்படை ஆகாயப்படையென்னும் முப்படைகளையும் ஏககாலத்திற் கொண்டுவந்து பகைவரைத் தலையெடுக்க வொட்டாது தாக்குவதேயாம்.

உலகம்பலவிதக் கதை

*சர்க்கரைப் பத்தலில் தேன்மாரி பெய்தவாறு

முதலியாரும் டக்ரர் சுந்தரராசனும் பின்னரும் சற்று நேரம் இருந்து நானா விஷயங்களையும் பற்றிப் பேசினர்; சாமியம்மாள் சிறிது நேரஞ் செல்ல இருவருக்குஞ் சிற்றுண்டி பானம் என்னுமிவைகளைப் பரிமாறினள். மாலைக்காலமாதலும் டக்ரர் சுந்தரராசன் தம் மடத்திற்குப்போய்ச் சந்தியாவந்தனம் முதலியன முடித்துச் சுவாமிதரிசனஞ் செய்யப் போதல் வேண்டுமென்று முதலியாருக்கும் மற்றையோருக்குந் தெரிவித்துப் புறப்பட, முதலியார் தாமும் அவருடன் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார்; இருவரும் மடத்திற்குச் சென்று சந்தி பண்ணிக்கொண்டு திருக்கோயிலுக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்துவிட்டுக் கோயிற் புறவீதியில் ஒரு அரசமர நீழலில் வசதியாக உட்கார்ந்தனர். முதலியார் கேள்விப்படி டக்ரர் தமது மரபு குடும்ப வரலாறு தாம் கற்றிருக்குங் கல்வி இனிமேற் செய்யவிருக்குந் தொழில் ஆதியவற்றை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்ல முதலியார் கேட்டு மகிழ்ந்தார்; தம்முடைய குலங் குடி கோத்திரங்களையும் தம் குடும்பத்தில் நிகழ்ந்த செயல்களையும் ஆதியோடந்தமாக முதலியாருஞ் சொல்லித் தாமும் டக்ரரும் ஒத்த மரபினரென்பதையும் தூரித்த உறவினரென்பதையும் டக்ரருக்கு எடுத்துக் காட்டினர். "ஆனதால் தம்பி, அந்தப் பாலகத்தரனை என் இளைய மகளுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கவிருந்த நோக்கத்தை அறவே விட்டுவிட்டேன்; அவன் இப்பொழுது ஊரில் இல்லை எங்கேயோ பரதேசியாகப் போய்விட்டான் எனக் கேள்விப்பட்டேன்...." என்று முதலியார் சொல்வதற்கிடையில் "ஐயா, அந்த ஆளைப்பற்றி இங்கே உங்களுக்கு ஒருவரும் இன்னமுஞ் சொல்லவில்லை போலும்" என்று இடையிற் சொல்லத் தொடங்கி அவன் சில வாரங்கட்கு முன் செய்த வஞ்சனையையும் தாமும் அந்த விஷயத்திற் பிரவேசித்துச் செய்த செயலையும் அவனைத் தாம் வைத்தியசாலையிற் கிடக்கக் கடைசியாகக் கண்ட விபரத்தையுங் கூறி முடித்தார் டக்ரர் சுந்தரராசன்; அதனைக் கேட்ட முதலியார் சிற்றமுங் கவலையுங் கொண்டவராய் "அந்தச் சண்டாளன் இங்கும் வந்து என் பிள்ளைகளுக்குத் துரோகஞ் செய்ய நினைத்தானோ" என்று ஆக்கிரத்தோடு கூறினர். பின்னரும் அவர் டக்ரரைப் பார்த்து "தம்பி, முதல் தெய்வம் இரண்டாவதாக நீரே ஆதரவற்றவர்களான என் பிள்ளைகளின் ஆருயிரை எல்லாவகையிலும் பாதுகாத்தீர்; உமக்கு நானும் என் பிள்ளைகளும் செயக்கூடிய கைம்மாறு எதுமில்லை. ஆனால், என் மூத்த மகள் தன்னுடைய தங்கை உம்மிடத்தில் அதிக விசுவாசம் வைத்திருக்கிறாள் என்று எனக்குச் சற்று முன்பு சொன்னாள்; எல்லாம் விதியின் செயலென்றே நான் எண்ணுகிறேன்; அதிகஞ் சொல்வதென்ன, உமது இஷ்டம் எங்கள் பாக்கியம்" என்று குறிப்பாலுங் கூறி முடித்து ஆழ்ந்த சிந்தனையோடு கூடியவராய்ச் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். முதலியார் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பதை அவதானித்த டக்ரர் அவரை நோக்கி "ஐயா, ஏன் அதிகம் யோசிக்கின்றீர்கள்; நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யென்று சொல்லுவார்கள்; அப்படி எங்கள் இருவரையுங் கூட்டிவைக்க வேண்டுமென்பது தெய்வத்திற்குத் திருவுளச் சம்மதம் எனப் புலப்படுகின்றது; இல்லாவிட்டால் முன் திருவண்ணாமலையிலும் பின் இங்கும் உங்கள் பிள்ளைகளும் நானும் காத்திராப்பிரகாரஞ் சந்தித்திருக்க மாட்டோம்; எனக்கும் உங்கள் மகளிடத்திற் பூரண விசுவாசமுண்டு; உங்களுடைய சமுகத்தையும் உத்தரவையுமே நானும் இதுகாறும் எதிர்பார்த்திருந்தேன்; உங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்வதற்கு எனக்கு எவ்வகையான தடையுமில்லை" என்று அவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். கேட்ட முதலியார் சொல்லொணா ஆனந்தமடைந்தார். குன்றக்குடிப் பெருமான் கோயில் கொண்டருளிய திக்கை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டார்; "தம்பி, இப்பொழுதுதான் என்னுள்ளம் குளிர்ந்தது. என் மக்கள் அதிட்டசாலிகள் என்பதை யுணர்ந்தேன்; உங்கள் இருவருக்கும் மணம் நிறைவேறிய பின் உங்கள் வாழ்க்கை சர்க்கரைப்பத்தலில் தேன்மாரி பொழிந்தவாறன்றோ விருக்கும்" என்று பலவாறுபாராட்டிப் பேசினர்.

[* இப் பழமொழி சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தவாறு என இக்காலத்திற் பிழையாக வழங்குகின்றது; பத்தல் என்பதன் பொருள் தொட்டி, நீர் இறைக்குஞ் சால். எனவே சர்க்கரை நிறைந்த தொட்டியில் இல்லை பேல் சாலில் தேன்மாரி பெய்தவாறென்பதே சிறந்த கருத்தாக அமையும்.]

போனவர் மீண்டமை

இருவரும் இப்படிப் பேசி முடிவு செய்துகொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கித் தாம் தாம் வசிக்கும் மடத்திற்கு மீண்டனர். முதலியார் அங்கு வந்து சேர்ந்தவுடன் சுந்தராம்பிகையைக் கல்யாணஞ் செய்வதற்குச் சுந்தரராசன் உடன்பட்டதாகிய மங்கல செய்தியைத் தமது மூத்த மகளுக்குச் சொல்ல அவள் அதனைக்கேட்டு மகிழ்ச்சியடைந்தவளாய்த் தெய்வத்தை வழுத்தினள். பின்னர்த் தமக்கை மூலமாகத் தங்கையும் அறிந்து அகம் பூரித்தாள்; பின்பு இச்சமாசாரத்தை முதலியார் மூலமாக இராமனும் அமிர்தாம்பிகை வாயிலாகச் சாமியம்மாளும் அறிந்து சந்தோஷமடைந்தனர். இரவு 8 மணிவரையிலிருக்கும், முதலியார் போசனஞ் செய்யும்போது தம் மக்களைப்பார்த்து "மக்காள், என் மனத்திலுள்ள சஞ்சலமெல்லாம் கடவுள் கிருபையினால் இப்பொழுது ஒழிந்தன. ஆனால் உங்கள் மைத்துனர் என்னைத்தேடி இன்னமும் அலைந்து திரிகின்றாரே யென்ற ஒரு கவலை தான் என் மனத்தைப் பாதிக்கின்றது" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்; "நீங்கள் கவலைப்படவேண்டாம் ஐயா, இன்றைக்கு இல்லையேல் நாளைக்கு அவரும் இங்கு வந்துவிடுவார்" என்று சுந்தராம்பிகை தகப்பனுக்கு ஆறுதல் வார்த்தை சொன்னாள். தகப்பனார் அவ்வார்த்தையைக் கேட்டு மன ஆறுதலடைந்தார்; எல்லோரும் போசனம் முடித்துக்கொண்டு பத்துமணிவரையில் தத்தம் படுக்கையை யடைந்தனர். அடுத்தநாட் காலை 9 மணிவரையிலிருக்கும், முதலியாருடைய மூத்த மருமகனாகிய சோமசுந்தரம் அங்கே வந்து சேர்ந்தார். மருகன்வரவை முதலியாரே முதன் முதற் கண்டார்; பெருமகிழ்ச்சி கொண்டார்; சோமசுந்தரமும் முதலியார் மடத்திலே வந்திருப்பதைக் கண்டு ஆநந்தமடைந்தார்; "தம்பி, வருக, வருக" என்று முதலியார் சொல்லித் தம் மருகனை உபசரித்தார்; இப்படித் தந்தை சொன்னதைக் கேட்டு மடத்தினுள்ளே இருந்த மக்களிருவரும் வாசற்புறத்தே வந்து எட்டிப் பார்த்துத் தங்கள் மைத்துனன் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்; "தம்பி, என்பொருட்டும் என் பிள்ளைகள் பொருட்டும் நீர் அதிகம் அலைந்துவிட்டீர்; சென்ற இரவும் நீர் என்னைத்தேடிக் கஷ்டப்படுகிறீரே யென்பதைப் பற்றி என் பிள்ளைகளுடன் சொல்லிக் கவலைப்பட்டேன்; ஏதோ தெய்வம் இப்பொழுது உம்மை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டது; இது எனக்குப் பெரும் ஆறுதல்" என்று மாமனார் மருகருக்குப் பல உபசார வார்த்தைகளைக் கூறினர். தங்கள் சொந்த ஊரிலுள்ள இனசனத்தார் நண்பர்களின் சுகத்தைப்பற்றி முதலியார் விசாரிக்க, சோமசுந்தரம் தாம் அறிந்த வரையிற் சொன்னார். மங்களத்தம்மாளின் சுகத்தைப்பற்றி மாமன் வினவாதிருக்கவும் மருமகன் சுருக்கமாகச் சொன்னார்; இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் "ஐயா, வெந்நீர் வைத்தாய் விட்டது. பயணஞ் செய்த சிரமந்தீர அவர்களை ஸ்நானஞ்செய்யச் சொல்லுங்கள்" என்று சுந்தராம்பிகை கதவண்டை வந்து நின்று சொன்னாள்; "அப்படியே ஆகட்டும்" என்று சோமசுந்தரஞ் சொல்லுதலும் இராமன் வந்து சோமசுந்தரத்தை ஸ்நானஞ் செய்யுமிடத்திற்கு அழைத்துச் சென்றான்; சோமசுந்தரம் ஸ்நானம் சந்தியாவந்தனம் முதலியன முடித்துக் கொண்டு வருதலும் சாமியம்மாளும் சுந்தராம்பிகையும் அவரை அழைத்து இருக்கச் செய்து உணவுபரிமாறினர். போசனம் முடித்துக்கொண்டு சோமசுந்தரம் பின்னரும் மாமனார் இருக்குமிடத்தில் வந்திருந்தார். அதன்பிறகு மாமனார் தாம் பிள்ளைகளைத்தேடி ஊரைவிட்டுப் புறப்பட்டகால் தொடக்கம் அன்றைவரையில் நடந்த அநுபவங்களையுஞ் செய்திகளையும் மருமகனுக்கு விரிவாக எடுத்துச் சொன்னார். டக்ரர் சுந்தரராசனுக்குச் சுந்தராம்பிகையை விவாகஞ் செய்து கொடுப்பதாகத் தமது மாமனார் நிச்சயித்திருப்பதைக் கேட்டவுடனே சந்தோஷப்பட்டுப் பாராட்டிப் பேசினர் சோமசுந்தரம்; டக்ரர் சுந்தரராசனைத் தாம் பார்க்கவேண்டுமென அவர் விரும்பினர்; "டக்ரர் இன்று பிற்பகல் ஐந்துமணிவரையில் இங்கே வருவார்" என்று முதலியார் மருகனுக்குச் சொன்னர். அந்தினத்தில் அம்மடத்தில் அவர்களெல்லோரும் சந்தோஷத்துடன் காணப்பட்டனர்.

அன்னைக்குக் கடிதம்

சுந்தராம்பிகை தகப்பனரிடம் வந்து "ஐயா, உங்களை அக்காளசர் காண விரும்புகிறார்" என்று சொல்லுதலும், "ஆம், கண்ணே வருகிறேன்" என்று சொல்லி உடனே மடத்தினுள் முதலியார் போய் "என்ன வேண்டும் கண்ணே" என்று வினவுதலும் தகப்பனரை இருக்கச் செய்து "ஐயா, நீங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டபின் எங்கள் அருமையான தாயாருக்கு ஏதுங் கடிதம் எழுதியதுண்டோ" என்று ஆவலுடன் அமிர்தாம்பிகை வினவினள். "இல்லை மகளே, நான் இன்னமும் உங்கள் தாய்க்குக் கடிதம் எழுதவில்லை" என்றார் தகப்பனர்; இவ்வார்த்தையைக் கேட்டவுடன் அமிர்தத்தின் கண்களில் நீர் ததும்பியது; அதனை அவதானித்த தகப்பனர் தம்மகளைக் கவலைப்படவிட மனமில்லாதவராய் "என் செல்வமே, நீ மனம் வருந்த வேண்டாம்; எங்கள் எல்லோர் பொருட்டும் நீயே உங்கள் அம்மாவிற்கு ஒரு கடிதம் எழுதித் தந்தால் நான் விலாசமிட்டு அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்ல அமிர்தாம்பிகை அதற்கு உடன்பட்டு அப்படி எழுதச் சென்றாள். உடனே அமிர்தம் தன் சகோதரியையும் உடன் இருக்கச் செய்து மிக்க ஆதரவுடன் தங்கள் தாயாராகிய மங்களத்தம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதி மீளவும் படித்துப் பார்த்துவிட்டு, அதனை விலாசமெழுதி அனுப்பிவைக்கும்படி தனது தகப்பனரிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். (வரும்)

'செக்கை' நம்பிக்கை மோசடி செய்தாராம்

யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் G. O. பைசர் யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். குவின்டன் பேர்னுண்டோ முன்னிலையில எஞ்சினீர்க் கந்தோரிற் சேவகனாகக் கடமை பார்க்கும் சந்தியாப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை சைமன் என்பவர் சென்ற 1941-ம் ஆண்டு ஆகஸ்ட் 29-ந் திகதி அக்கந்தோரில் எழுதாளராகக் கடமைபார்க்கும் மிஸ்டர். K. P. ஞானப்பிரகாச மென்பவரின் பேருக்குக் கொழும்பு அளவைக்கந்தோரால இந்தியாவிலுள்ள இம்பீரியல் வங்கிக்குக் கொடுக்கப்பட்ட OD/3 90526 என்னும் இலக்கமுடைய 'செக்'கை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டி வழக்கைத் தொடர்ந்தார்.

எழுதாளராகிய மிஸ்டர். K. P. ஞானப்பிரகாசம் கூறியவற்றின் சுருக்கம் வருமாறு:-

"நான் சென்ற 28-1-41 முதல 30-8-41 வரையும் கந்தோரிலிருந்து லீவு எடுத்துக்கொண்டு நின்றேன். நான் லீவுஎடுத்தபோது கந்தோர்ச் சேவகனாகிய தம்பவிடம் எனக்கு வரும் காகிதங்களை என்னிடம் கொண்டுவந்து தரும்படி அறிவித்திருந்தேன். நான் திரும்ப 1-9-41 ல் கந்தோருக்குக் கடமைபார்க்கச் சென்றேன. அப்போது முதலாவது எழுத்தாளராய்க் கடமைபார்க்கும் மிஸ்டர். வீரவாகுவிடம் எனக்கு ஏதும் காகிதங்கள் வந்ததுண்டோவெனக் கேட்டேன். பின்னர் எதிரியாகிய சைமனிடம் விசாரித்தபோது எனக்குக் காகிதம் வந்ததாயும் அக்காகிதத்தை எதிரி என்னிடம் கொண்டுவரும்போது வழியில் எங்கோ போட்டுவிட்டதாகவும் அறிந்தேன. நான் பின்னர் கொழும்பிலுள்ள அளவைக் கந்தோருக்கு எழுதிவிசாரித்தபோது அவர்கள் 28-8-41-ந் திகதி எனக்கு ரூபா 21-05 சதத்திற்கு ஒருசெக்கை அனுப்பியதாயும் அதனுடைய இலக்கம் OD/3 90526 என்றும் அறிவித்தனர். நான் எனனுடைய கடமைநேரமல்லாத காலத்திலேயே அளவையும் அவதானித்துக் குறிப்பிடுவதற்கு அளவைக்கந்தோர் எனக்குமேலதிகமாக ரூபா 21 தருவதுண்டு. எதிரி மேற்கூறிய அளவையில எனக்கு உதவிசெய்வதற்கு ரூபா 12 அக்கந்தோரால் கொடுக்கப்படுவார். எனனுடைய "செக்"காணாமற் போனதைப்பற்றிப் பொலிசாருக்கு நான அறிவித்தேன்.

இதன்பின்னர், "செக்"கை மாற்றிக் காசுகொடுத்த பெரியகடையில வியாபாரஞ்செய்யும் மிஸ்டர். K. N குமாரசுவாமி சாக்ஷியங் கூறிய பின்னர், நீதிபதி எதிர்வரும் 5-2-42-ந் திகதி வரைக்கும் விசாரணையைத் தவணைபோட்டார்.

ஈ. கீ.

பட்டினசபைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

சமாதான முடிவு

19-1-42

பட்டினசபைத் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்தவன்று பிற்பகல், பட்டினசபைத் தலைவர் மிஸ்டர். R. சிவகுருநாதரும் சுகாதார டாக்குத்தர் மிஸ்டர். துரைராசாவும் பொலிஸ் உதவிச் சுப்பிறிண்டெண்டன் மிஸ்டர். செரிசாவும் செம்மாதெருவிலுள்ள தொழிலாளர் சங்கக் காரியாலயத்திற்குச் சென்று சங்கத் தலைவர் மிஸ்டர். A. எதிர்வீரசிங்கத்தையும் தொழிலாளரையுஞ் சந்தித்துக் கலந்து பேசினர். வேலைநிறுத்தஞ்செய்திருந்த தொழிலாளர் அங்கு கூட்டமாகவிருந்தனர்.

மிஸ்டர். R சிவகுருநாதர் தொழிலாளருக்கும் சங்கத் தலைவருக்கும், தாம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருப்பதைப் பற்றி வருந்துவதாயும், சில காலத்திற்கு முன்பு தான் பட்டினசபைத் தொழிலாளர்களது சம்பளத்தை உயர்த்திக் கொடுத்ததாயும், அப்படியிருந்தும், அவர்களுடைய குறைகளைத் தாம் கண்டு ஆலோசித்துச் செய்யக்கூடியவற்றைச் செய்வதாயும் பிள்ளைகள் பெற்றோரிடத்து எப்படி நம்பிக்கை வைத்திருப்பார்களோ அதுபோலத் தொழிலாளர்தம்மீதும் நம்பிக்கை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மிஸ்டர். A. எதிர்வீரசிங்கம் வேலை நிறுத்தத்திற்கான காரணங்களை எடுத்துக் கூறித் தொழிலாளர்கள் ஒரு சங்கத்தின் மூலமே முறைபாடுகளைச் செய்வதென்பதைத் தாம் வற்புறுத்துவதாயும், அவர்களது குறைகள் முதலில் கவனிக்கப்பட வேண்டுமென்றுங் கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் சுப்பிறிண்டெண்டன் மிஸ்டர். செரிசா பேசும்போது, தாம் தமமுடைய உத்தியோகக் கடமையின் பொருட்டு அங்கு வந்ததாயும், தாம் ஒரு கட்சியையும் சார்ந்தவரல்லவென்றும் ஒருவர் வேலைக்குச் செல்வதிலோ அல்லது செல்லாது விடுவதிலோ யாருந் தலையிடக்கூடாதென்றும், அப்படி எந்தவிதமான தலையீட்டையுந் தாம் அனுமதிக்கப் போவதில்லை யென்றுங் கூறினர். மேலும், அவர் தொழிலாளர்கட்கு ஒரு புத்திமதியை எடுத்துக் கூறும்போது, பட்டினசபை வேறு தொழிலாளரை ஏற்படுத்திக் கொண்டால், வேலைநிறுத்தஞ் செய்த தொழிலாளர்கட்கு வேலையில்லாமற்போக நேரலாகும், நேரக்கூடும். ஆகையால், தொழிலாளர்களே! உங்களுக்குச் சங்கம் வேண்டுமா? மிஸ்டர். எதிர்வீரசிங்கம் தலைவராக இருக்கவேண்டுமா? என்பதைத் தமக்குக் கைகளை உயர்த்திக் காட்டும்படி கேட்டார். தொழிலாளர் ஏகமனதாக மேற்கூறிய இரண்டும் வேண்டுமென்று கைகளை உயர்த்திக் காட்டினர் அப்போது செரிசா மிஸ்டர். R சிவகுருநாதரைப் பார்த்து தொழிலாளர்கட்குச் சங்கத்திடமும் மிஸ்டர். எதிர்வீரசிங்கத்திடமும் நம்பிக்கை இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை யாகையால் சங்கத்தை ஆதரிப்பதிற் சந்தேகமுண்டோ வென்று கேட்டார். பின்னர் மிஸ்டர். R சிவகுருநாதர் தாம் நகரசபையில ஒரு அவசரக் கூட்ட மொன்றைக் கூட்டுவதாயும் அப்போது தொழிலாளரின் சார்பாக மிஸ்டர். எதிர்வீரசிங்கங்கொண்டு வரும் விஷயங்களைத் தாம் சபைக்கு விட்டு ஆலோசனை செய்வதாயும் கூறினர்.

மிஸ்டர். A. எதிர்வீரசிங்கம் இவைகளின் பின் மிஸ்டர் செரிசாவுக்கும் மிஸ்டர். R. சிவகுருநாதருக்கும் மிஸ்டர். துரைராசாவுக்கும் நன்றி சொன்னர். பின்னர் அவர் தொழிலாளரை நோக்கி நகரசபை கூடி உங்கள் குறைகளைக் கவனிக்குமென்றும், அதன்பின், ஆகவேண்டிய விஷயங்களைக் கவனிக்கலாமென்றும் கூறித் தொழிலாளர்களை உடனே வேலைக்குப் போகுமாறு கேட்டார். தொழிலாளர் உடனே திரும்பவும் வேலைக்குச் சென்றனர்.

விளம்பரம்

"ஆகாயப்படை தாக்குமிடத்தில் அவதானிக்க வேண்டிய கற்பனைகள்" இது டெமிப்பிரமாணமுள்ள காகிதத்தில் பெரிய அட்சரங்களில் தெளிவாக அச்சிடப் பட்டுள்ளது. விலைசதம் 5. இந்துசாதன ஆலயத்திற் கிடைக்கும்.

பெண்சோர வழக்கு

எதிரிக்கு ரூ. 60 அபராதம்

21-1-42

வண்ணார்பண்ணை, கலட்டியில் வசிக்கும் பதினறு வயதுக்குட்பட்ட மாசிமுத்து அல்லது அன்னம்மா வென்னுஞ் சிறுமியை மைத்துனனும் மூத்த சகோதரியை விவாகஞ் செய்தவனுமாகிய சின்னட்டி-நாகமணி அவளுடைய பெற்றோருடைய பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கு நீதிபதி மிஸ்டர். குவின்டன் பேர்னுண்டோ முன்னிலையிற் றொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கில், சிறுமியின் பெற்றோர் எதிரி மீது கடுமையான தண்டனை விதியாது விடும்படியும் எதிரி மூத்த சகோதரியையே விவாகஞ் செய்திருப்பதால், எதிரிமீது கடுந்தண்டனை விதிக்கப்பட்டாலும், அதன் பெறுபேறும் தங்களையே பாதிப்பதாக விருக்குமென்றும் கூறுவதாக நீதிபதிக்குக் கூறப்பட்டது. மேலும், தண்டனை விதிப்பதை நீதிபதியின் ஆலோசனைக்கே விடப்படுவதாகவும் கூறப்பட்டது.

எதிரி தாம் குற்றவாளி யென்பதை ஒத்துக்கொள்வதாகக் கூறினன். நீதிபதி எதிரியும் சிறுமியும் மற்றையோரும் ஒரே வீட்டில் சீவித்து வந்தமையால், எதிரிக்கு விதிக்கவேண்டிய சிறைத்தண்டனையை விதிக்காது அறுபது ரூபா அபராதம் விதித்தார். மேலும் எதிரி தன்னுடைய மனைவியாரையும் அழைத்துச் சென்று வேறிடத்திற் சீவிக்கக் கொள்ள வேண்டியதென்றும் கூறப்பட்டது.

கூரைமீது நின்று தீயணைப்பவர்கள்

அரசாங்கத் தலைமைக் காரியாலயங்களில் நியமிக்கப்படுவர்

லண்டனைப்போல் இலங்கையிலும் அரசாங்கத்தலைமைக் காரியாலயங்களில் நெருப்பணைப்பதற்கான விசேஷ அதிகாரிகள் இருவர் நியமிக்கப்படுவார்கள். இவர் கட்டடங்களின் கூரைகள்மீது நின்றுகொண்டு அங்கு விழக்கூடிய நெருப்புக்குண்டுகளாற் கட்டடங்கள் சேதமடையாமல் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள். குறித்த காரியாலயங்களின் விமான எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டத்தில் இதுவுமோர் அம்சமாகும்.

அரசாங்கத் தலைமைக் காரியாலயக் கட்டிடங்கள் மிகவும் பலம் பொருந்தியவை. அவைகளில் முதல்மாடி காலிசெய்யப்பட்டுவிட்டால் ஏனைய விடங்களில் வேலைசெய்யுஞ் சிப்பந்திகளுக்கு அதிகமான பாதுகாப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

தீயணைப்பதற்கும் ஆரம்ப சிகிச்சையளிப்பதற்கும் ஆட்கள் திரட்டப்பட்டிருப்பதோடு அவைகளுக்கான சாதனங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. காரியாலயங்கள் முழுவதிலும் மணல்வாளிகள் தண்ணீர்வாளிகள் முதலியவை ஏராளமாக வைக்கப் பட்டிருக்கின்றன. யன்னல்களின் கண்ணாடி உடைந்து சிதறிவிடாதபடி பாதுகாக்கும் பொறுப்புப் பகிரங்க வேலைப்பகுதியாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு தமாடிக்கும் நான்கு விமான எதிர்ப்புப் பாதுகாப்பு வார்டன்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். மேலும் தீயணைப்பு வேலை ஆரம்பசிகிச்சை முதலியவைகளின் பொறுப்பும் சில அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத் தலைமைக் காரியாலயங்களின் விமான எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டப்படி அங்கு மொத்தம் நான்கு ஆரம்பசிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

தற்காலிக சுகாதார மந்திரி

கொழும்பு ஜன 21—

தற்காலிக சுகாதார மந்திரி ஒருவரைத் தெரிவு செய்வதற்காகச் சுகாதார நிர்வாகசபை இன்று கூடும்.

நிரந்தர மந்திரியான மிஸ்டர். ஏ. டி. சில்வாவுக்குத் தேக அசௌக்கியங் காரணமாக மூன்றுமாத விடுதலை வழங்கப்பட்டிருக்கிறது.

மிஸ்டர். ஜோர்ஜ். ஈ. டி. சில்வா போட்டியின்றித் தற்காலிக சுகாதார மந்திரியாகத் தெரிவு செய்யப்படுவரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்காலிக மந்திரி தெரிவு செய்யப்பட்டபின், அவர் இன்று பின்னேரம் தேசாதிபதிக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்படுவார்.

தந்திச் சமாசாரங்கள்

பர்மிய மந்திரி தடுக்கப்பட்டார்

18- 1- 42

பர்மிய நாட்டின் மந்திரியாகிய யூ ஸா என்பவரை, பகைவராகிய யப்பானியருடன் பேச்சு வார்த்தைகள் வைத்திருந்தார் என்ற காரணத்தினால் பிருத்தானிய அரசினர் இவரை எங்கும் சுயாதீனமாகப் போக வொட்டாது தடுத்து வைத்திருக்கின்றனரெனச் சொல்லப்படுகின்றது; தாம் அப்படிப் பகைவருடன் பேச்சு வார்த்தை வைத்திருப்பது நிசந்தான் என்று இந்தப் பர்மிய மந்திரி ஒப்புக் கொள்ளுகிறாராம். "இக்கிடையிற் காட்டிலும் நாங்கள் கண்கண்ட யப்பானியரை நம்புவோம்" என்று அந்த மந்திரி சாதிக்கின்றாராம்.

சிங்கப்பூரிற் சைநியந் திரட்டுதல்

சிங்கப்பூரிலுள்ள பிருத்தானிய பிரசைகளுள் அயிரோப்பியர்களாயுள்ள ஆண்கள் 41 வயசிற்கு மேற்படாதவரெவரும் இராணுவத்திற் சேர்தல் வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கிறதாம்.

"விட்டுக் கொடுக்க வொண்ணுது"
பிருத்தானிய மந்திரியின் வீரப்பேச்சு

பர்முடா என்னுமிடத்தில் பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்றர். லேர்ஜில் பின்வருமாறு பேசியுள்ளார்:-

"நாங்கள் இப்பொழுது தனியே நிற்கவில்லை; 26 சாதியினர் எங்களுடன் ஒருங்கு சேர்ந்து இந்த யுத்தத்திலே ஒத்துழைக்கச் சித்தமாயிருக்கிறார்கள்; பிருத்தானியராகிய நாங்கள் தனியே நின்ற காலத்திலும் பின்வாங்கவே மில்லை, பெலவீனப்படவேயில்லை, சுவதந்திரம் பெறும் வரைக்கும் நாங்கள் ஐக்கியப்பட்ட சாதியினராய் முற்பட்டு முயற்சி செய்ய ஆயத்தமாயிருக்கின்றோம்; எங்கள் கடமையைச் சிறந்த முறையில் இயன்ற வரையிற் செய்கின்றோம். இனி நடக்க வேண்டியதை ஆண்டவன் பொறுப்பில் விட்டிருக்கின்றோம். நாங்கள் அவதானிக்க வேண்டியவைகளென்ன; எங்களுக்குக் கிடைக்கக்கூடிய பிரதியுபகாரமென்ன! சுயாதீனத்தின் பொருட்டுச் சமர்புரியும்போது ஒருகாலும் பகைவருக்கு விட்டுக் கொடுக்கவொண்ணுதென்பது சற்றில்லாம பெருமிதத்தோடு சொல்லக் கூடியது பிருத்தானிய அரசே உலகத்தைப் பாதுகாக்கக் கூடிய பழைய சக்கராதிபத்தியமாகு மென்பதாம்.

கிழக்கு யுத்தத்தைப் பற்றிப் பாராளுமன்ற அங்கத்தவர் கூறியது

பிருத்தானிய பாராளுமன்றத்து அங்கத்தவருள் ஒருவராகிய மிஸ்றர். E ஷின்வெல் என்பவர் பிருத்தானிய அதிகாரிகள் கிழக்குப் பகுதி யுத்த விஷயமாகச் சிறிது அலட்சியமாக இருக்கிறார்களென்ற கருத்துப்படப் பின்வருமாறு கூறினர்:-

"பிருத்தானிய சக்கராதிபத்தியம் எங்கள் கண்முன்னர்ச் சிதைவுறநாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது; ஆனாலும் அதிகாரத்தோடுள்ளவர்கள் வாளாவிருக்கின்றனர், இன்னும் என்னதீமை நேருமென்பதைச் சொல்ல முடியாது. கிழக்குப்பகுதியிற் சில இடங்களில் எங்கள் சைநியத்தின் பெலம் போதாதெனச் சொல்லப்படுகிறது; எங்ஙாயினும் போதிய படைப் பெலமுண்டோ என்பதுதான் ஆசங்கை"

யப்பானிய விமானங்கள் சுட்டு விழ்த்தப்பட்டன

20- 1- 42

செலிபிஸ் என்னுமிடத்திற்கு வடகிழக்கே பகைவராற் கைப்பற்றப்பட்டதாகிய மெனடோ என்னுமிடத்திலே அமெரிக்கருக்குரிய 5 ஆகாய விமானங்கள் யப்பானிய விமானங்களைத் தாக்கினவாம். நடந்த யுத்தத்தில் யப்பானியருக்குரிய விமானம் 9. சேதமுற அமெரிக்கருக்குரிய விமானங்களுள் ஒன்று சேதமுற 2 விமானங்கள் மீண்டுவரவில்லையாம்.

தவோய் யப்பானியராற் பிடிபட்டது

தவோயென்னுமிடங்களிலுள்ள ஆகாயப்படை ஸ்தாபனம் யப்பானியராற் கைப்பற்றப்பட்டதாம்.

இரங்கூனில் இருந்தவர்கள் இந்தியாவிற்கு மீண்டனர்

தென்னிந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கோடைகால வெப்பத்தை உத்தேசித்து வருஷந்தோறும் 3 மாச காலத்திற்குத் தேச சுவாத்தியத்தை உத்தேசித்து உதக மண்டலத்திற்குச் செல்லுதல் வழக்கம்; ஆனால் இந்த வருஷத்தில் யுத்தத்தைவிட்டு அவ்வாறு போதலைத் தவிர்த்து விட்டார்களாம்.

இரங்கூனிலிருந்த இந்தியர்களுள் இப்பொழுது 500 பேர்வரையில் சென்னைநகரில் வந்து சேர்ந்துள்ளார்களாம். இவர்களுட் பெரும்பாலோர் பெண்களும் பிள்ளைகளுமேயாவரெனச் சொல்லப்படுகிறது. இரங்கூனிலிருந்து கல்கத்தாவுக்கு மீண்டவர்கள் எழுநூற்றுக்கு மேற்பட்டவர்களாம்.

சிங்கப்பூர்

மூவார், செகமத் என்னுமிடங்களில் யப்பானியர் கடுமையாக நெருக்குதலால் பிருத்தானிய சைநியம் சிறிது பின்னிடலாயிற்றும், சிங்கப்பூரில் 18 பகைவர் இட்ட வெடிகுண்டுகள் காரணமாக 56 பேர் மாண்டுபோக 135 பேர் காயமுற்றனர். யப்பானியர்கள் சிங்கப்பூருக்கு இன்னும் 25 மைல் தூரமிருக்க கடுஞ்சமர் செய்கின்றனரென்று தெரிவிக்கின்றனர். ஆனால் பிருத்தானியர் யப்பானியருடைய கூற்றை இன்னமும் உண்மையென ஏற்றுக்கொள்ள வில்லையாம்.

பயிற்சிபெற்ற மோட்டார்ச்சாரதிகள்

இராணுவ சேவைப் படையிற் சேர்த்துக்கொள்ளப்படுவர்

அரசாங்கத்தேவைக்கு மேலும் வாகனங்கள்

இலங்கை இராணுவ சேவைப் படையோடு சேவை செய்வதற்குப் பயிற்சி பெற்ற மோட்டார்க்கார் டிறைவர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுமென்று அறியப்படுகிறது. சமீபத்தில் மோட்டார்க்கார் டிறைவர்கள் பலருக்கு வேலையில்லாமற் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இராணுவ அதிகாரிகள் பல லொறிகளை இராணுவத் தேவைக்கு எடுத்துக் கொண்டபொழுது அவற்றின் டிறைவர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

இப்பொழுது இலங்கை இராணுவச்சேவைப் படையிலுறுப்பட்டிருக்கும் காவி ஸ்தாபனங்களுக்கு டிறைவர்களை நியமிக்கும்போது குறித்த படையின் தளகர்த்தர் இராணுவத் தேவைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட லொறிகளின் டிறைவர்களாக இருந்து இப்பொழுது வேலையில்லாதிருப்பவர்கள் விஷயத்தில் விசேஷ கவனஞ் செலுத்துவார்.

மோட்டார்கார் டிறைவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புக் கொமிஷனர் பகுதியால் வேலைக்கமர்த்தப்படும் மற்றொரு சந்தர்ப்பமும் விரைவில் ஏற்படும். அந்தப் பகுதி காயமடைந்தவர்களைக் காப்பாற்றுமது சம்பந்தமான சேவைக்குப் பல மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொள்ளவிருக்கிறது.

இத்தேவைக்காக எடுக்கக் கொள்ளப்படும் ஒவ்வொரு வாகனத்தையும் சேர்ந்த டிறைவர்களை வேலைக்கமர்த்திக் கொள்வது சாத்தியமில்லாதிருப்பினும் வேலையில்லாதிருக்கும் டிறைவர்களனைவருக்கும் வேலை கொடுக்க முயற்சிக்கப்படுமென்று அறியப்படுகிறது.

கரையோரப் பாதுகாப்பு வேலைக்கு ஆசிரியர்கள்

வெளியூர்ப் பாடசாலைகள் பலவற்றிலுள்ள ஆசிரியர்கள் கரையோரப் பாதுகாப்பு வேலைக்கு நியமிக்கப் பட்டிருக்கின்றனரென்று அறியப்படுகிறது.

இந்த ஆசிரியர்கள் மதுபரிபாலன இலாகா பெகற்றர்களின் ஒத்துழைப்போடு மதுபரிபாலனக் கொமிஷனரின் அதிகாரத்தின் கீழ்க் கடமையாற்றுவர். மதுபரிபாலன இலாகா பெகற்றர்கள் சிலர் கரையோரப் பாதுகாப்பாளர்களாக இப்பொழுது நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

கரையோரப் பாதுகாப்பு வேலை செய்யும் ஆசிரியர்கள் கல்விப்பகுதியிலேயே இருப்பார்கள். அவர்களின் சம்பளத்தோடு அலவன்ஸும் கொடுக்கப்படுமென்று அறியப்படுகிறது.

பாதுகாப்புக் கூடங்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

...டேர்லன் ஒதுக்கிடங்கள் எனப்படும்.

C தரை மட்டத்திலே செங்கற்களாலும் மணல் நிரப்பிய குழாய் போன்ற கொங்கிறீற்றினாலும் அல்லது தறாவம் உபயோகிக்கப்பட்டு வருகின்ற வார்த்தெடுத்த கொங்கிறீற்றினாலும் அமைந்த ஒதுக்கிடங்கள் இன்னொரு விதமான பாதுகாப்பு முறையாகும்.

4 இவைகளுடன் நிலவறைகளிலுள்ள ஒதுக்கிடங்களையும், (கட்டடத்தின்) உள்ளே யிருக்கும் ஒதுக்கிடங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக அவசியம் அறிந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அது என்னவெனில் இப்பொழுதுள்ள நிலவறைகளுள், அவைகளின் தற்கால நிலைமையிலே, சேஷமமான பாதுகாப்பாய் அமைந்திருப்பவை (அப்படி அமைந்தவை உண்டானால்) சிலவற்றினும் சிலவேயாம். அவைகளுடைய சுவர்களையும் அவைகளுக்கு மேலுள்ள வீட்டின் நிலத்தையும் தக்கவாறு பலப்படுத்த வேண்டும் வெடியின் அதிர்ச்சியையும் கட்டிடம் இடிந்தால் அவ்வாறு இடிந்து விழும் கட்டிடத்தின் பாரத்தையும் தாங்கக் கூடியதாகப் பலப்படுத்த வேண்டும். போக்கு வரத்துச் செய்யும் பிரதானமான வாசல் தற்செயலாக அடைபட்டுப் போனால் ஆபத்துக் காலத்தில் உபயோகிப்பதற்கென்று பிரத்தியேகமான வாசலும் இந்த ஒதுக்கிடங்களுக்கு அமைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

(5) யாதாயினு மொருவிதமான பாதுகாப்புக் கூடம் அமைப்பதைப் பற்றி யுத்தம் தொடங்க முன்னமே ஆலோசனை செய்யப்பட்டது. அகப்பட்ட வெளியான இடங்களிலே அகழிக் கிடங்குகள் வெட்டப்படுவதைப் பற்றியும் நன்றாய்ப் பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் ஈற்றிலே பின்வருங் காரணங்களினாலே அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டாமென முடிவு செய்யப்பட்டது:-

(A) கொழும்பிலே பலபாகங்களிலும் பூமியின் கீழே வெகு சமீபத்திலே தரைமட்டத்தை யடுத்துத் தண்ணீர் இருக்கிறது. அந்த நிலைக் கிடங்குகளிலே தண்ணீர் தங்கியிருக்கால் நுளம்பு பெருவாரியாகப் பெருகும். சுகாதாரத்துக்கும் ஜனங்களுடைய தேகாரோக்கியத்துக்கும் கேடுவிளையும்.

(B) ஒதுக்கிடம் அவசியமாய்த் தேவையான இடத்திலே, அதாவது குடிசனம் நெருக்கமுள்ள இடத்திலே, அகழிக் கிடங்கு வெட்டத்தக்க வெளியான இடம் அகப்படவில்லை. ஆபத்தை யறிவிக்கும் எச்சரிக்கை ஒலியைக் கேட்ட இரண்டொரு நிமிஷத்திற்குள்ளாக ஒதுக்கிடம் அவர்களுடைய பாதுகாப்புக்காக ஏற்பட்டதே. அவர்களுக்கு அதனாற் பிரயோசனமில்லாமற் போய்விடும். இதை மனதில் நன்றாய்க் குறித்துக் கொள்ள வேண்டும்.

(6) மேற்கூறிய காரணங்களினாலே எல்லாக் குடிசனத்தையும் காப்பாற்றக் கூடிய அகழிக் கிடங்குகளை வெட்டுதல் அசாத்தியம் என்பது தெரியக்கிடக்கின்றது. இதனாலா, மற்றவிதமான ஒதுக்குகளுக்குத் தேவையான உருக்கு, இரும்பு முதலியவை அகப்படாமையினாலும், அரசாங்கமும் கொழும்பு முனிசிப்பாலிட்டியும் பாதுகாப்புக் கூடங்கள் அனுபவ சாத்தியமானதன்று என நிச்சயித்துக் கொண்டன.

(7) எனினும், பொதுஜனங்கள் தங்களுக்கு ஒதுக்கிடங்களைத் தாங்களே செய்து கொள்ள விரும்பக்கூடும். அப்படிச் செய்ய விரும்புவோர் ஆகாயத் தாக்கல் எதிர்ப்புப் பாதுகாப்பு அதிகாரி, பகிரங்கப் பகுதி (P. W. D. மராமத்திலாகா)த் தலைமைக் கந்தோர், சதாமவீதி, கொழும்பு என்னும் விலாசத்துக்கு எழுதினால், அவர்களுக்குத் தேவையான விபரங்கள் அந்த அதிகாரி அறிவிப்பார்.

அதிகாரிகளுடைய புத்திமதியையும் ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளாமல் கீழான நிலையான கிடங்குகளை வெட்டக் கூடாது. அவ்வாறு பொருத்தமில்லாத கிடங்குகளினாலே சுகாதாரக் கேடு மாத்திரமன்றி, கிடங்குகளிலுள்ளமையினால் வரும் ஆபத்தினும் பார்க்கப் பெரிய ஆபத்துகளும் விளைதல் கூடும்.

வகுப்பு நேரம் குறைக்கப்பட வேண்டும்

ஆசிரியசங்கத்தின் ஆலோசனை

ஒரு நேர வகுப்புகள் உள்ள பள்ளிக்கூடங்களில் வகுப்பு நேரத்தை மேலும் குறைக்கவேண்டுமென்று அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிருவாகசபை ஆலோசனை கூறியிருக்கிறது. ஆரம்பப் பாடசாலைகளின் வகுப்புநேரத்தை மிகவுங் குறைத்துவிட வேண்டுமென்றும் சங்கம் ஆலோசனை கூறியிருக்கிறது.

அகில இலங்கை ஆசிரியர் சங்கக் கூட்டம் கொழும்பு வைஹிராக்கல்லூரியில் நடைபெற்றது. சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரான மிஸ்றர் டி. பி. ஜயா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். கொழும்பு, வடமாகாணம், கண்டி, தென்மாகாணம், ஊவா, மட்டக்களப்பு, சப்பிரகமுவை, கேகாலை முதலிய பகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

புதிய ஆசிரியர்களை நியமிப்பது பற்றி வித்தியாகர்த்தா விடுத்திருந்த சுற்றறிக்கை கூட்டத்திற் பரிசீலனை செய்யப்பட்டது. பிறகு ஆசிரியர் பதவிக்கு ஏற்கனவே செய்யப்பட்ட நியமனங்களை அங்கீகரிக்க மறுக்கக் கூடாதெனவும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியப் பதவி காலியாகும்போது, ஆசிரியர்களின் தராதரத்திற்குத் தக்கவாறு விசேஷ நியமனங்களைச் செய்ய வேண்டுமெனவும் வித்தியாகர்த்தருக்கு எடுத்துக் கூறச் சங்கம் தீர்மானித்தது.

ஏற்கனவே பதவி வகித்துவரும் ஆசிரியர்கள் வேறு பள்ளிக்கூடங்களில் நியமனம் பெறுவதைப் புதிய நியமனங்களின்மீதுள்ள தடை பாதிக்கக் கூடாதென்றும் கூட்டம் தீர்மானித்தது.

சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் பெப்ரவரி மீ 13ந் திகதியும் 14ந் திகதியும் நடத்துவதென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

பல அதிகாரிகளுக்கு ஒரே டெலிபோன்

டெலிபோன் சாமான்கள் மிகவுங் குறைவாகவே யிருப்பதால் டெலிபோன் வசதியைக் கூடியவரை குறைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்க காரியாலயங்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மேலும் அத்தியாவசியகமான வேலைகளுக்காக, டெலிபோன்கள் மிகவுந் தேவைப்படுகின்றன. ஆகவே, சாத்தியமானவரை ஒரே டெலிபோனைப் பலர் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் பொருட்படுத்தக் கூடாதென்றும் அரசாங்க அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு செய்வதால் குறைந்த பட்சம் 200 டெலிபோன்களை எடுத்துவிட முடியுமென்று கருதப்படுகிறது. ஆஸ்திரேலியா இந்தியா முதலிய தேசங்களிலிருந்தும் ஐக்கிய சாம்ராஜ்ய நாடுகளிலிருந்தும் டெலிபோன் சாமான்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இருந்தாலும் 'சப்ளை'க்கு மேல் தேவை மிகவும் அதிகப்பட்டுத்தான் இருக்கிறது.

தந்திக் கம்பிகளும் குறைவாகவே இருக்கின்றன. டெலிபோன் வசதியை அமைக்கவிரும்பும் தனிப்பட்டவர்களில் அநேகருக்கு இன்னும் அவ்வித வசதியளிக்கவேண்டியிருக்கிறது.

விவாகம்

கந்தையா—சிவக்கொழுந்து

நிகழும் விஷு வருஷம் தை மீ 8ந் திகதி (21-1-42) புதன்கிழமை சூரிய உதயத்திலுள்ள மங்கலகிய சுபமுகூர்த்தத்தில் காரைவெட்டி ஸ்ரீமாத். க. வேலுப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் கந்தரோடை பாடசாலைத் தலைமை ஆசிரியரும் ஆகிய திருவளர் செல்வன் கந்தையா அவர்களுக்கும் காரைவெட்டிவாசரும் வட்டுக்கோட்டை கிழக்குச் சைவப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஏகபுத்திரி திருவளர் செல்வி சிவக்கொழுந்து அவர்களுக்கும் மணமகனில்லத்தில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

தம்பதிகள் சகல செல்வமும் பெற்று இனிது வாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

கூடுதலான சித்திர சிகிச்சை அறைகள்

அவசர தேவைக்கு ஆஸ்பத்திரி ஏற்பாடுகள்

நெருக்கடியான நிலைமை ஏற்படுங் காலத்திற் காயமடைந்தவர்களுக்குச் சத்திரசிகிச்சை செய்வதற்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏற்கனவேயுள்ள இரண்டு சத்திர சிகிச்சை அறைகளோடு இன்னும் ஆறு சத்திர சிகிச்சை அறைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

கூடுதலான சத்திர சிகிச்சை அறைகள் ஏற்படுத்தப் படுவதால் ஒரே சமயத்தில் அதிகமான சத்திர வைத்தியர்கள் சத்திர சிகிச்சை செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இரண்டு சத்திர சிகிச்சை அறைகள் பல நோய் ஆஸ்பத்திரியில் அமைக்கப்படும். இதுவரை இப்பொழுதுள்ள சத்திரசிகிச்சை அறையின மாற்றங்களை உண்டுபண்ணப் படுகின்றன. கண் ஆஸ்பத்திரியிலும் ஒரு சத்திர சிகிச்சை அறை அமைக்கப் பட்டிருக்கிறது.

ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வெளிநோயாளிகள் பகுதியின் சத்திர சிகிச்சை அறையும் பெரிய காயங்களுக்குச் சத்திரசிகிச்சை செய்வதற்கு ஏதுவாக அமைக்கப் பட்டிருக்கிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் எக்ஸ்றே சிகிச்சை செய்யும் கட்டடத்திலும் இரண்டு சத்திர சிகிச்சை அறைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

நெருக்கடிச் சமயத்திற் பல்வைத்திய ஆஸ்பத்திரியை வெளிநோயாளிகள் பகுதியாக உபயோகிப்பதற்கு இப்பொழுது ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. காயமடைந்தவர்களில் பலவைத்திய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செலலப்பட்டு வெளிநோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை அளிக்கப்படுவதோடு அவசியமாக இருந்தால் ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்படுவர். சிறு காயக்காரர்களான அநேகமாகப் பல்வைத்திய ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்படுவர்.

யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை-பிரவேசம் 1942

2-ம் வருடப் பயிற்சி

யாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலைப் 2-ம்வருடப்பயிற்சிப்பிரவேசப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் சைவவித்தியா விருத்திச் சங்கபாடசாலை மனேஜரால் 1942-ம் ஆ மாசி மீ 15ந் வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பம் அனுப்புவோர் London Matric, Cambridge Senior அல்லது S. S. C. (ஆங்கிலம்) பரீட்சைகளொன்றில் தமிழ் ஒருபாடமாகச் சித்தியடைந்தவராயேனும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 1942-ம் ஆ மாசி மாதம் 28-ந் திகதி வித்தியா கந்தோருக்கு அனுப்பப்படவேண்டி யிருப்பதால் 1942-ம் ஆ மாசி மீ 15-ந் திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப் பத்திரங்களை வித்தியா கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளவும். எங்களால் சிபார்சு செய்யப்பட்டோரே பிரவேச பரீட்சைக்குத் தெரியப் படுவர்.

General Manager
சைவவித்தியா விருத்திச்சங்கம்
யாழ்ப்பாணம் 12-1-42
Mis 171—19, 22.26.1.42

பிரதம வகுப்புகளுக்குரிய விரிவான பாடவிதானம் விலை ரூபா 2-00, தபாற்செலவு சதம் 25.
கிடைக்குமிடம்,
1. R. C. Chellaiyah
Station School
Manipay
2. பிரபலபுத்தக வியாபாரிகள்
Mis 19—22-1-42

வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானாலும்
உத்திரவாதத்துடன்
குணப்படுத்தப்படும்
சுகாதார மாஜி மந்திரி கனம்
Dr. T. S. S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr C. சபாபதி, M. B. C. M.
M. R. C. S. L. R. C. P.
முதலிய பலரால் புகழ்ந்து சற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன. நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்
Dr. K. S. Paripurnananda
Regd. Medical Practitioner
R. K. S. Vaidyasala
Palaly Rd Kandarmadam
JAFFNA
Q 120 6-11-41—5-2-42

ஆகாயப்படை தாக்குமிடத்து அவதானிக்க வேண்டிய கற்பனைகள்

1 அபாய அறிக்கை:

அழுகைச் சத்தம்போல் மின்சார ஊதுகுழல் மூலம் "அபாய" அறிக்கை கொடுக்கப்படும். அதே ஊதுகுழல் மூலம் ஒரேவிதமாக ஊதல்வாயிலாக "அபாயமில்லை" என்ற அறிக்கை கொடுக்கப்படும்.

2 மின்சார ஊதுகுழல் ஊதும்போது நீங்கள் வீட்டுக்குள் இருந்தால்:

A காஸை (Gas) யும் மின்சாரத்தையும் முக்கிய இணைப்பினின்றும் ஓடாது தடுத்துவிடுங்கள்.

B வீட்டில் அல்லது வளவில் அதற்கென அமைத்த ஒதுங்குமிடமிருந்தால் அங்கே செல்லுங்கள். அன்றேல் வீட்டுக்குள் தங்கியிருங்கள். யன்னல்களுக்கு அருகில்லாமல் தூரத்தில் அதிபலமானதும் மத்தியமானதுமான ஓர் அறையில் ஒதுங்கியிருந்து கொள்ளுங்கள். கட்டில்களுக்குக் கீழும் பலமான மேசைகட்குக் கீழும் ஒதுங்கியிருக்கலாம்.

3 வீட்டுக்கு வெளியே நின்றால்:

A அதற்கென அமைத்த ஒதுங்குமிடம், அகழி அல்லது பலமான கட்டிடத்துக்குக் கிட்ட நீங்கள் நின்றால், அதனுள் தங்குங்கள்.

B அல்லது உடம்பின் பாரத்தை முழங்கையால் தாங்கிக்கொண்டு, ஒரு கைலேஞ்சியை அல்லது பென்சிலைக் கடிப்பது மூலமாக வாயைத் திறந்து வைத்துக்கொண்டு நிலத்தில் குப்புறப் படுத்துக் கொள்ளுங்கள்.

C ஒரு மோட்டார்வண்டியில் அல்லது வேறு வண்டியில் நீங்கள் இருந்தால், றோட்டின் ஒரு கரைக்குச் சென்று வண்டியை விட்டிறங்கி நிலத்தில் குப்புறப் படுத்துக்கொள்ளுங்கள்.

4 செய்யக்கூடாத காரியங்கள்:

உங்கள் கந்தோரை, வீட்டை அல்லது ஒதுங்கு மிடத்தைவிட்டு விலகவேண்டாம்; "அபாயமில்லை" என்ற ஊதுகுழற் சத்தம் கேட்கும் வரை விருந்தைகளுக்கு அல்லது மேல்மாடங்களுக்குப் போக வேண்டாம். எக்காரணத்தின் பொருட்டும் வெளியே தெருவீதிகளுக்குப் போகவேண்டாம்; கண்ணாடி யன்னல்களுக்கும் கதவுகளுக்கும் கிட்டப் போக வேண்டாம்; இவற்றை மூடியும் வைத்திருக்க வேண்டாம்.

ஒ. ஈ. குணத்திலக்க,
சிவில்பாதுகாப்புக்கொம்மிஷனர்

செக்கிறிற்றேறியற்கட்டிடம்
கொழும்பு 1942-ம் ஆ ஜனவரி மீ 1-ந் தேதி

சங்கானை மேற்கு சைவ இளைஞர் ஐக்கிய ஐந்தாம் வருட நிறைவு விழா

சங்கானை மேற்குச் சைவ இளைஞர் ஐக்கியத்தின் ஐந்தாம் வருட நிறைவுவிழா நிகழும் விஷு ஆ தை மாசம் 4ந் திகதி (17- 1- 42) சனிக்கிழமை இரவு 7 மணியளவில் மேற்படியூர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் வட்டுக்கிழக்குச் சைவாங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களின் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரையின் பின், வருடாந்த அறிக்கையும் வரவுசெலவுக் கணக்கும் சபையோர்க்குச் சமர்ப்பிக்கப்பட்டன. டணுக்கம் மெய்கண்டான் தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் பண்டிதர் திரு. செ. நடராசா அப்பூதியடிகளின் சரித்திரத்தைப்பற்றி ஓர் இனிய விரிவுரை நிகழ்த்தினர், நியாயவாதி திரு. வே. நாகலிங்கம் "சமயவழிபாடு" என்னும் விஷயம்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினர் கருமப் பணம் சேர்க்கப்பட்ட பின், இச்சங்கத்தால் நடத்தப்படும் இராப்பாடசாலை மாணவிகள் ஓர் ஆங்கிலப் பாட்டைப் படித்தபின், ஓர் ஆங்கிலக்கதையைச் சொல்லித் தமிழில் மொழிபெயர்த்தார்கள். பின் இராப்பாடசாலை மாணவருள் மிகத் தேர்ச்சியடைந்தோர்க்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. தலைவர் தமது பின்னுரையிற் பெண்பிள்ளைகளைப் பிறமத பாடசாலைகட்குப் போகாது தடுக்க இச்சங்கம் எடுத்தபெருமுயற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டனர். செயலாளர் எல்லோர்க்கும் நன்றி கூறிய பின், தேவாரபாராயணத்துடன் கூட்டம் 11 மணியளவில் இனிது நிறைவேறியது.

—நிரு

செங்குந்த இளைஞர் கலாவிருத்திச் சங்கம்

12-வது வருடாந்த விழா

13. 1. 42 தொடக்கம் நான்கு நாட்களாக இவ் விழா நடைபெற்றது. முதல் இருநாட்களிலும் விளையாட்டுக்களும் கைப்பந்தாட்டமும் முறையாக நடாத்தப்பட்டன மற்றைய இருநாட்களிலும் செங்குந்த இவிபாஷா பாடசாலை மண்டபத்திற் கூட்டங்கள் நடைபெற்றன. முதற் கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் டிஸ்ரிக் நீதிபதி ஸ்ரீமாத். C. குமாரசுவாமி (C. C. S.) அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் பாரியார் பரிசு வழங்கினார்கள். இந்துசாதனப் பத்திராதிபர் ஸ்ரீமாத் ம. க. வே. திருஞானசம்பந்தர் அவர்கள் "செந்தமிழும் சைவசமயமும்" என்பது பற்றியும், பரமேசுவர பண்டிதாசிரிய கலாசாலை ஆசிரியரான வித்துவான் கார்த்திகேயபிள்ளை அவர்கள், "இல்வாழ்க்கை" என்பதுபற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். அடுத்த கூட்டம் சுவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்கள் தலைமையிலே, மூத்ததம்பி வித்தியாசாலை ஆசிரியராய பண்டிதர் திரு. சு. இராசையா அவர்களாலும், இந்துசாதனத் துணையாசிரியர் ஸ்ரீமான். க. சிவராஜன் அவர்களாலும் முறையே "தமிழ்ப்புலமை", "கடவுள் பக்தி" என்னும் பொருள்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. இவ் விரு கூட்டங்களிலும் மாணவர் விஷயங்களும், பண்டிதர் மு. நவரெத்தினம் அவர்களால் நன்றி கூறலும் நடைபெற்றன.

—நிரு

கல்கத்தாவில் மிஸ்றர். டப்கூப்பர்

பிரிட்டனுக்குத் திரும்புகிறார்

கல்கத்தா, ஜன, 17—

மிஸ்றர். டப்கூப்பரும் அவருடைய மனைவியாரான லேடி டயானா டப்கூப்பரும் பிரிட்டனுக்குச் செல்லும் மார்க்கத்தில்இங்குவந்துசேர்ந்தனர்.

இந்து இளைஞர் முன்னேற்றச் சங்கம்

9-1-42 ந் திகதி வெள்ளிக்கிழமை நல்லூரிலுள்ளவர்களும், மற்றும் கிராமத்தவர்களும், ஒன்றுசேர்ந்து ஒரு சபை கூடி அதில் 5-ம் வட்டாரப் பிரதிநிதியார் திரு. டக்டர் V. S. இராமநாதன் அவர்களைச் சபையோர்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். பின்னர்ச் சபையோர்கள் இச்சபைக்கு இளைஞர் முன்னேற்றச் சங்கமென்று பெயர் வைத்தார்கள். பின்பு, பிறக்டர். V. சோமசுந்தரம் அவர்களை உபதலைவராகவும் S. S. விசுவலிங்கம் அவர்களைத் தனாதிகாரியாகவும், க. துரைசிங்கம் அவர்களைக்காரியதரிசியாகவும்சபையோர்கள் தீர்மானித்தனர். அதை எல்லோரும் ஏகமனதோடு ஆதரித்தார்கள். பின்பு, சங்கத்தின் கொள்கையை வாசித்ததும் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

இச்சங்கத்தின் 19-வது வருடாந்த மகாசபைக் கூட்டம் 1942-ம் ஆண்டு ஜனவரி மீ 24-ந் திகதி பிற்பகல் 3½ மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் டெபுடி சங்கத்தலைவர் வித்தியாதிகாரி மிஸ்றர். எல். மெக். டீ. றொபிசன் தலைமையில் நடைபெறுமென்றும், அவ்வமயம் (1) வரவேற்பு, (2) ஆவேதனம், (3) உத்தியோகஸ்தர்கள் தெரிவு, (4) மஹோபாத்தியாய திரு. V. இராமசாமி சர்மாவால் "பரிமேலழகர் உரைமாண்பு" என்னும் விஷயமாகவும், பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினத்தால் "மறைந்த சில தமிழ் நூல்கள்" என்னும் விஷயமாகவும் முறையே, இரு சொற்பொழிவுகள், (5) தலைவர் உரை, (6) நன்றிகூறல் ஆகியவை நடைபெறுமென்றும் சங்கக்காரியதரிசி தெரிவிக்கின்றார்.

வடகிழ் மாகாணங்களின் சுப்பிறீம் கோடுகள்

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் ஆரம்பம்

வடமாகாணச் சுப்பிறீம் கோட்டின் முதல்விசாரணை அடுத்தமாதம் 2-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நீதிபதி மிஸ்றர். கானன் தலைமையில் ஆரம்பம்.

கிழ்மாகாணச் சுப்பிறீம் கோட்டின் முதல்விசாரணை அடுத்தமாசம் 24-ந் திகதி மட்டக்களப்பில் பிரதம நீதிபதி தலைமையில் ஆரம்பமாகும்.

வாரவழிபாடு

...த் தொடர்ச்சி

யைப் பின்பற்றுதல் அவசியம். இச்சுருக்க முறையிலேயே அம்பிகையையும் வழிபட்டுப் பின்பு அனைவரும் தத்தம் வீடுசெல்லலாம். கால எல்லையையும் பொழுதுச் செட்டையும் கருதி, வார வழிபாட்டின் இப்பகுதியை 15 நிமிடங்களில் நிறைவேற்றிவிடுதல் நல்லது. இம்முறையில் நிகழும் வழிபாட்டிற்கு வேண்டிய மொத்த நேரம் ஒரு மணி பதினைந்து நிமிடமாகும்.

எங்கும் வாரவழிபாடு நடத்துதற்கு வேண்டிய அமைப்பு

இத்தனைச் சிறப்பு வாய்ந்த வார வழிபாட்டை இடைவிடாது நடாத்தி வருதற்கு ஓர் அமைப்பு வேண்டுமன்றோ என்னும் ஓர் எண்ணம் தோன்றலாம். விரிவான அமைப்பொன்றும் வேண்டுவதில்லை. சபாசபாபகராம் தில்லைக் கூத்தரே இக்கூட்டங்கட்கும் சபாநாயகர்-தலைவர். அவர் வாழ்க்கைத் துணைநலமாகிய உலகின்ற அன்னையே துணைத் தலைவர். வாரவழிபாட்டில் நம்பிக்கையுடைய அன்பரனைவரும் சங்க உறுப்பினர். இவருள் மிக்க ஆர்வமுள்ள நல்ல இளைஞர் ஒருவரைச் சங்கச் செயலாளராக ஆண்டுக்கொருமுறை ஏற்படுத்திக் கொள்வது சாலும். மாதச்சந்தா என்னும் நியமம் தானும் அவசியமன்று. பூட்டி முத்திரையிட்ட உண்டியொன்றில் கூட்டத்தில் அன்பர் மனமுவந்திடும் சிறு காசுகளும், அவசியம் நேர்வுழி அன்பர் அளிக்கும் கண்கொடைப் பொருளும், வழிபாட்டுச் செலவுகட்கு வேண்டிய வருமானமாகும். இத்தொகை கொண்டு பாராயணப் பாசுரங்கள் முதலிய சமயப் பிரசுரங்களை வெளியிடுதல், ஆலய வழிபாட்டின் சார்பாக நேரும் சொற்பச் செலவுகளைச் செய்தல் முதலிய தொண்டுகளை இயற்றி வரலாம். மாதத்திற்கொருமுறை வழிபாட்டுக் கூட்ட முடிவில், உண்டியைத் திறந்து, அதிற் சேர்ந்த பொருளைக் கணக்கிட்டு, கூட்டத்திலேயே மாத வரவு செலவு கணக்கைச் செயலாளர் படித்துக் காட்டிவிடலாம்.

வார வழிபாட்டின் விழுமிய பயன்

உள்ளனபுடன் கிராமந்தோறும்-பேட்டைதோறும் - மேற்குறித்த சுருக்க அமைப்பில் வார வழிபாட்டை இதுதக்கள் ஒன்று சேர்ந்து செய்து வந்தால், அவர்கள்பால் இப்போது காணும் பல்வகைக் குறைகள் விரைவில் நீங்கும். உற்று நோக்குவோர் இதனுண்மையை எளிதில் உணர்வர். நிலையில் திரிந்துள்ள இக்கால இந்து சமுதாயத்தில் நற்பண்புகள் வேரூன்றி வளர்வதற்குத் தெய்வ மின்சாரசக்தி ஒன்று அதனுட் பாய வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அம்மின்சாரத்தை உற்பத்திசெய்யுமிடம் தேவாலயம்; உற்பத்தி செய்யும் உபாயங்களில் சிறந்ததொன்று வார வழிபாடு. வாரத்தோடு (வாரம்—அன்பு) வாரந்தோறும் இவ்வழிபாடு எங்கும் நிகழ்ந்துவரின், தனி மனிதன் வாழ்விலும் ஆலயங்களிலும் தெய்வக்கலை மீண்டும் விசும். உயரிய குறிக்கோள் சுயமவருள்ளத்தைக் கவரும். சாதி குலம் பிறப்பென்னும் தடுமாற்றம் நீங்கும். உலக வாழ்வில் காணும் செருக்கு, போட்டி, பகை, வறுமை முதலிய சிறுமையெல்லாம் ஒழியும். அறிவும், அன்பும், அறனும், அறஞ்சார் வீரமும், ஒற்றுமையும், பலமும், செழிப்பும், புத்துயிர்பெற்று ஓங்கும், வீட்டு வாழ்வும் நாட்டு வாழ்வும் மாசற்று விளங்கும். காலத்தின் தேவையை உணர்ந்து பலர் ஒன்று சேர்ந்து, எளியவர்கட்குக் கல்வி, கைத்தொழில், கல்லொழுக்கம், தெய்வபக்தியாதி நலங்களை வளர்தற்கான சிவகாருணியச் செயல்களைத் திறம்பட மேன்மேற் செய்து வருவர். தெய்வபக்தி மேலிடும்.

காலடைவில், வார வழிபாட்டுடன், மாத (முழுமதிநாள்) வழிபாடு, அயன வழிபாடு, ஆண்டு (வருடப் பிறப்பு) வழிபாடு முதலியவையும் பெருகும். சிறப்புடன் செய்து இன்ப மெய்ப்பயன் எய்துதல் இயல்பாம்.

இப் பெருந்தொண்டினை ஊக்கத்துடன் தொடங்கி நிகழ்த்தி வரும் பொறுப்பு, சிறப்புவகையில் நம் சமய சகோதரிகளைச் சார்ந்தது. அவர்கள் ஒத்துழைப்பும் தூண்டுதலும் இன்றியமையாதவை. திலகவதியார், மங்கையர்க்கரசியார், செம்பியன் மாதேவியார்*

*இவர், திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர் என்னும் சோழமன்னருடைய மனைவியார். சிவபத்தியிற் சிறந்தவர்; பல சிவாலயங்களைக் கட்டி முடித்த செம்மனச் செல்வியார்.

தடுத்தது மானமொன்றே

முதலாம்பக்கத் தொடர்ச்சி

பூர்வசென்மத்தில் செய்த நல்ல தவத்தின் பயனல்லவா?

இவ்வாறெல்லாம் வழுத்திய ஞானது சாத்விக குணத்தை இறைவன் மாற்றினானாக முன்னையனவும் முன்னைய எண்ணங்களும் கைவரப் பெற்று,

'குழுதல் வேண்டும் தாள்க டொழு
 திடல் வேண்டு மங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி தமித்
 திடல் வேண்டிச் தாது
வாழுதல் வேண்டும் நிறை யகன்
 றகா லிவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சத் தடுத்
 தது மான மொன்றே'.

என்று கூறிப் போர்க்கெழுகின்றான். உண்மையுணர்ந்தும் மானம் தடுத்ததனாலன்றோ அவன் போர்க்கெழுந்தான்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா
 வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்".
 என்பர் நாயனாருமென்க.

சைவசாஸ்திர பரிபாலனம்—

விசேஷ விளம்பரம்

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, முதலிய, தேசங்களின் பிரதான ரேகைசாஸ்த்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக்கூடும்.

ஸ்புடம் நசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 விடயங்களுடன் கோசரபலன் காலசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

போக்கத்தை, நா. சின்னத்துரை
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19-7.42

மீராபாய் முதலிய பெண்மணிகளின் திருநாமங்கள் இக்காலப் பெண்மணிகளையும் சமயப் பெரும்பணியை மேற்கொள்ளுமாறு ஊக்கவல்லன. இங்ஙனம் இருபாலாரும் இறைவனை வழிபட்டு வருவாராயின், தெய்வம் தோன்றாத் துணையாய் வெளிப்பட நின்று அருள் புரியும். இக்காடு மட்டுமன்றி உலக முழுதுமே துயர் தீர்ந்து இனிது வாழும்.

முடிப்புரை

"உன்னுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றும், "கடனென்ப நல்லவையெல்லாம் கடனறி சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு" என்றும் ஆன்றோர் பணித்துள்ளனர். மக்கள் "வான் நோக்கும் இன்பம் வேண்டி" உழலாமல், "வான் நோக்கும் வழியாவது" நிற்றல் வேண்டும் என்னும் உணர்ச்சியுடையராயிருத்தல் எக்காலினும் போலவே இக்காலினும் அவசியம். அவ்வழியில் அனைவரும் விரைந்து செல்லுதல் வேண்டும் என்று நல்லோர் நாடுவர்; அதற்குத் தம்மாலியன்ற அளவு தளராது பாடுபடுவர். அவர் செய்யும் முயற்சி, அவர் குறித்த அளவு பயனைத் தருமோ தாராதோ என்று அதிகமாய் ஆராய வேண்டுவதில்லை. "ஆயக்கடவேன் நானோ தான்? என்னதோ இங்கதிகாரம்?" என்று ஒரு மணிவாசகம் வினவுவது இந்த நிலைவிற்கு வாலாம். "வேண்டி வினை செயேல்" என்னும் கருமயோகக் கட்டளையை மேற்கொண்டு, திருவருள் வழிகாட்டுமளவில், நறகருமங்களை நல்லாரனைவரும் ஒன்று சேர்ந்து செய்து கொண்டே போதல்மட்டும் அவர் கடனும். இந்த நிலையின் நின்று அன்பர்கட்குப் பணிவுடன் தெரிவிக்கும் ஓர் ஆலோசனையைக் கொண்டதே இச்சிறு கட்டுரை. இந்து சமுதாய முன்னேற்றங் கருதி இதிற் கண்டுள்ள முறையினைவிடச் சிறந்ததொன்று ஆன்றோர்க்குத் தோன்றலாம். அதனை அவர்கள் வெளியிடுவதற்கும், பலர் அதனை மேற்கொண்டு நடத்தற்கும், இது ஒரு தூண்டுகோலாயிருக்குமாயின், இது தன் பணியை நிறைவேற்றியதாகும். "தாய் தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவா மருவி எப்பொருளும் வளர்ப்பர்". ஆதலின், எல்லாம் அவனையாம்.

"அடியா ராவீர் எல்லீரும்
 அகல விடுமின் விளையாட்டை;
கடிசே ரடியே வந்தடைந்து
 கடைக்கொண் டிரும்பின் இருக்
 குமிப்பவை."
"நிறபி செல்லாம் தாழாத
 சிறதும் பரிசே ஒருப்படுமின்;
பிற்பால் நின்று பேழ்கணித் தால
 பெறுதற் கரியன் பெம்மானே"
 —மாணிக்கவாசகர்.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(* இசைத்தட்டு)

(396 மீ)

வெள்ளி ஜனவரி 23

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருச்சேலை ஆர். கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பழகிய தாலகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படப்பாட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருச்சேறை ஆர் கிருஷ்ணபிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திட்டே கிருஷ்ண ஐயங்கார் பாட்டு 5-40 குரான் இ-ஷரீப் விளக்கம் 5-50 இஸ்லாமியத் துதிப்பாடல்கள் † 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 என். ஆர். கிருஷ்ணமூர்த்தி நாகஸ்வரம் 7-10 சடை-முதல்நிகழ்ச்சி 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் † † 8-45 திட்டே கிருஷ்ணய்யங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 நாஜி பிரசாரம் 1-00 ஒலிபரப்பு முடிவு

சனி ஜனவரி 24

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 வி. ராஜாராமய்யர் வயலின் 7-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 நினைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. ராஜாராமையர் வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஏ. வி. நாராயணப்பா பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

5-00 ஏ. வி. நாராயணப்பா பாட்டு 5-40 திருப்பாவைவிளக்கம் 5-50 பஜனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சி ஸ்ரீமதி. எஸ். டி. சுப்புலக்ஷ்மி பாட்டு வாத்திய கோஷ்டியுடன் 7-00 ஜப்பானில் செய்தது 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 வி. வெங்கட கிரியப்பா வீணை 9 15 ராஜதமரி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 நாஜிபிரசாரம்பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஜனவரி 25

காலை 7-30 ஆரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 கே. ஆர். தங்கவேலு பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸாவித்திரி † 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 நேயர் விருப்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 மைசூர் டி. புட்டுசாமையா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 இருதாலிசை † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 00 கே. ஆர். தங்கவேலு பாட்டு 5-40 தேவாரதனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 மைசூர் டி. புட்டுசாமையா பாட்டு 7-15 புது உபயோகங்கள் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 பாபா கே. எஸ். வெங்கட்ராமய்யா வயலின் 9-05 அமெரிக்க அபிப்பிராயம் † † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 நாஜி பிரசாரம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஜனவரி 26

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஏ. பி. சின்னத்தம்பிப் பிள்ளை நாகஸ்வரம் 8-10 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 நிரைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஆர். விஸ்வநாதன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 05 ஏ. பி. சின்னத்தம்பி பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 கானதாஸா பாட்டு 7-45 செய்ய சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8.00 முடிகொண்டான் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை 9-55 நாஜிபிரசாரம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்

ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ட்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தாபம் இந்துசாதன ஆபீஸிற்கு முன்னுள்ளது. இன்று தொடக்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது கீழ்க்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேம்.

விலாசம்:-

V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.

Q 134 17. 11 .41 16. 2. 42

புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம். 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு இயைந்த

தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை

1	இலக்கியவாசகம்	முதற்பாகம் சதம்	15
2	,,	இரண்டாம்பாகம் சதம்	20
3	,,	மூன்றாம் பாகம் சதம்	25

செந்தமிழ்க் கருவூலம்

திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழும் தரங்களில் மாணவர்கள் செய்யுளிலக்கிய அறிவை வளரத் தற்சமயம் பாடபுத்தகமாகக் கொள்ளத்தக்கது.

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

வடமாகாண

ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டளைப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-

1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ 1-00

தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்

ச. போ இராசையா
காரியதரிசி.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
H 145 1-12-41—31-5 42

குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

c/o S. Veeragathipillai & Sons.

(Y. 164. 11-8-41—10-8-42.) வி

600 வருஷப் பழமை வாய்ந்தது

பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.

"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.

நேத்திர ரத்தின தைலம் நோய்களை
மாற்றிப் பெயர் பெற்ற
மருந்தெண்ணெய்

இந்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல் கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம் நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும். கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.

குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருதற்கு உத்தரவாதமுடையது.

விலை ரூபா. 2/50

ஏஜென்டுகள்:- எஸ் மால்ஜீ அமீஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23.10.41-22-1.42

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்ற, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔஷதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அர்டோரட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430-3-41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)

பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார் பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20-8-40 மனேஜர்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரோப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4.3.41—3.3.41

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி

[illegible]

பத்திரக்கிரயம்

[illegible] தமிழ் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12-00
தொலைவப் பகுதி 9-00 இங்கிலீஷ் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday January 22nd 1942.